விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 12 செவ்வாய்க்கிழமை (28.09.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 283


அரிசியை உற்பத்தி செய்யோம்
10


சுகாதார பரிந்துரையை முன்வைக்குக
07


நாட்டை மீட்க போராட்டம்
07


உள்ளக பொறிமுறை வேண்டாம்
03

# சர்வதேசத்தின் தலையீட்டை ஒருபோதும் ஏற்கமாட்டோம்

## நாடு திரும்பிய ஜி.எல்.பீரிஸ் திட்டவட்டம்

*(கொழும்பு)*

**உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொறுப்பை சர்வதேசத்திடம் ஒப்படைப்பதற்கு இலங்கை ஒருபோதும் தயாரில்லை என்று வெளி விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

**இலங்கைக்கு எதிரான சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு ஒரு போதும் அடிபணியமாட்டோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.**

அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், நேற்று ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பி லேயே மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்த தாவது.

15



எதிர்வரும் 6ஆம் திகதி

## யாழ்.வருகிறார் பிரதமர் மகிந்த

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 6ஆம் திகதி பிரதமர் மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணம் விஜயம் செய்ய வுள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி (பூனை) பகுதியில் 24000m$^3$

15

நாட்டில் மேலும்

## 51 பேர் மரணம்

(கொழும்பு)

கொரோனாத் தொற்

15

## வெள்ளியன்று நாட்டை மீண்டும் திறக்கத் தயார்

### 36 மணி நேரத்துக்குள் கட்டுப்பாடுகள் அறிவிக்கப்படும்

(கொழும்பு)

வரும் வெள்ளிக்கிழமைக் குப் பின்னர் நாட்டை மீண்டும் திறப்பதற்கான அனைத்து ஏற் பாடுகளும் மேற் கொள்ளப்பட்டுள்ள

15

## அரிசி விலை அதிகரிக்கும் அபாயம்

### கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்து வெளியிட்ட அரசிதழை இரத்துச் செய்ய அமைச்சரவை தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையில் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை நீக்க நேற்று இடம்பெற்ற அமைச்சர வைக் கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் முன்ன தாக வெளியிடப்பட்டுள்ள அரிசிக் கான அதிகபட்ச மொத்த விலை மற்றும் அதிகபட்ச சில்லறை விலையுடன் தொடர்புடைய வர்த்தமானி அறிவித்தல் இரத் துச் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, கையிருப்பை பேணும்

15

## நல்லாட்சியில் வலி.வடக்கில் விடுவிக்கப்பட்ட காணிகள் இராணுவத்தால் மீளக்கையகப்படுத்தும் நடவடிக்கை

### வலி.வடக்கு பிரதேச தவிசாளர், சுமந்திரன் எம்.பி நேரில் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

கடந்த நல்லாட்சிக் காலத்தில் வலி.வடக்கில் விடுவிக்கப்பட்ட காணிகளை இராணுவத்தினர் மீளக்கையகப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் நிலையில் அப்பகுதிகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்

15

விபரீத முடிவெடுத்த

## குடும்பப் பெண் உயிரிழப்பு

**யாழில் சம்பவம்**

(யாழ்ப்பாணம்)

விபரீத முடிவெடுத்த இளம் குடும்பப் பெண் ஒருவர் உயிரி ழந்துள்ளார்.

இதில் யாழ்ப் பாணம் ஆனைக்

15

## நாடு திறக்கப்பட்டாலும் கட்டுப்பாடுகள் அவசியம்

### வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத்

(கொழும்பு)

கோவிட் தொற்று பரவலுக்கு இடமளிக்கப்பட்டால் மாத்திரமே அதன்மூலமான அபாயத்தை எதிர்கொள்ள நேரிடும்.

எனவே ஏதேனுமொரு சந் தர்ப்பத்தில் நாடு திறக்கப்பட்டா லும் அடிப்படை சுகாதார விதி முறைகளைப் பின் பற்றினால் கோவிட்

15

வாளுடன் 'ரிக்ரொக்'

## 19 வயது இளைஞன் யாழில் கைது

(யாழ்ப்பாணம்)

வாளுடன் 'ரிக்ரொக்' காணொளி பதிவு செய்து வெளியிட்ட 19 வயது இளைஞன்

15

## அத்தியாவசிய பொருட்களையே அரசால் வழங்க முடியவில்லை

### ஜே.வி.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் செழிப்பை உருவாக் கும் வாக்குறுதியுடன் ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தினால், குறைந்தபட்சம் எரிவாயு மற்றும் பால் மா போன்ற அத்தியாவசியப் பொருட்களைக்கூட மக்களுக்கு வழங்க முடியவில்லை என்று ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, நேற்று செய்தியாளர்

15

**காணி விற்பனைக்கு**

பலாலி - யாழ்ப்பாணம் வீதியில் புன்னாலைக்கட்டுவன் வடக்குச் சந்தியில் இருந்து வடக்குப் பக்கமாக 500 மீற்றர் தூரத்தில் பிரதான வீதியின் மேற்குப் பக்கமாக உள்ள வீதியில் 4 ஆம் காணி 7 பரப்பு உடன் விற்பனைக்கு உண்டு. (8037)

நேரடித் தொடர்பு:- 076 999 2016 | 077 323 7891



**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532


## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர்

திரு. **இ. சிவநாதன்** அவர்களது

அன்புத் தந்தை

### திரு. செல்லத்துரை இராஜதுரை

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்

யா / கொக்குவில் இந்துக் கல்லூரி

(7994)

## மணிவிழா வாழ்த்து



### திருமதி சுனேத்திரா செல்வரட்ணம்

( ஆசிரிய ஆலோசகர் - ஆங்கிலம் )

சேவைக் காலம் : 34 வருடங்கள்

ஓய்வு நாள் : 27.04.2021

மணிவிழா நாள் : 27.09.2021

தங்களின் கல்விப் பணியைப் பாராட்டி வாழ்த்துவதுடன் ஓய்வுக் காலத்தில் மகிழ்வுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :

ஊழியர் நலன்புரிச் சங்கம்

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்,

நல்லூர்.

(C 2702)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை

திருமதி **பிரியதர்சினி சுகுமார்**

அவர்களது அன்பு மாமி

### திருமதி வண்ணமயில் சுந்தரநாதன்

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்

யா / கொக்குவில் இந்துக் கல்லூரி

(7993)

# புதிதாக பிறக்கும் குழந்தைகளுக்கு அடையாள அட்டை எண் வழங்குங்கள்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

பிறக்கும்போதே ஒவ்வொரு குழந்தைக்கும் தேசிய அடையாள அட்டை எண் வழங்கப்பட வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

சிறுவர்களுக்கு கோவிட்-19 தடுப்பூசி போடுவதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தலைமையில் அமைக்கப்பட்ட தொழில்நுட்பக் குழு, தடுப்பூசி போடப்பட்ட குழந்தைகளுக்கு அடையாள அட்டை எண் இல்லாதது குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

பிறக்கும்போதே ஒவ்வொரு குழந்தைக்கும் தேசிய அடையாள அட்டை எண்ணை வழங்குவதற்காகவும் 16 அல்லது அதற்கு மேற்பட்ட வயதில் அந்த எண் கொண்ட அடையாள அட்டையை வழங்குவதற்காகவும் ஒரு புதிய அரசமைப்புத் திருத்தத்தை உருவாக்க நியமிக்கப்பட்ட வல்லுநர் குழுவிற்கு தொழிற்சங்கம் பரிந்துரைத்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி நேற்று ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

(ம-03)

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன் **ல. திலீப்குமார்** அவர்களின் அன்புத் தந்தை

### அமரர் கிருஷ்ணன் லட்சுமிகாந்தன்

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**2002 நண்பர்கள்**

**யாழ். இந்துக் கல்லூரி**

(8049)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 15 . 04 . 1949



மறைவு 29 . 08 . 2021

### அமரர் கமலாதேவி நவரட்ணம்

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்

எமது வாழ்வில் ஒளியேற்றிய தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்திபெற

இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் நேரடியாகவும் தொலைபேசியூடாகவும் பத்திரிகையூடாகவும் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(8038)

82 / 8. கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம். 077 917 3947 குடும்பத்தினர்

# இலங்கையின் போர்க்குற்ற விசாரணைகள் உள்ளகப் பொறிமுறையுடன் இடம்பெறக் கூடாது

## நோர்வே பாராளுமன்ற உறுப்பினர் ஹம்சாயினி வலியுறுத்து

(ஒஸ்லோ)

**இலங்கை அரசாங்கம் ஜனநாயகமான நாடு என்பதை எடுத்து காட்ட வேண்டும் எனில் யுத்த குற்ற விசாரணைகள் அவசியம் என இலங்கை வம்சாவளியான நோர்வே பாராளுமன்ற உறுப்பினர் ஹம்சாயினி குணரத்தினம் தெரிவித்துள்ளார்.**



மேலும் இந்த போர்க்குற்ற விசாரணை உள்ளகப்பொறி முறையுடன் இடம்பெறக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை சிறுபான்மையினரின் உரிமைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு பெரும்பான்மையினருக்கும் இருக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் இலங்கையைப் புறக்கணிப்பதில் எவ்வித பலனும் இல்லை முதலீடுகளை மேற்கொண்டால் மட்டுமே வேலை வாய்ப்பை உறுதி செய்ய முடியும்.

இதேவேளை அழைப்பு விடுக்கப்பட்டால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்திக்கவும் தயாராக இருப்பதாகவும் ஹம்சாயினி குணரத்தினம் தெரிவித்தார்.

வர்த்தகம், கல்வி மற்றும் பிற வழிகளில் நோர்வே இலங்கைக்கு தொடர்ந்து உதவ வேண்டும் என்றும் இந்த விடயம் தொடர்பாக நோர்வே வெளிவிவகார அமைச்சர் மற்றும் இலங்கையில் உள்ள நோர்வே தூதுவர் ஆகியோருடன் கலந்துரையாடுவோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# பாடசாலைகள் ஆரம்பித்தால் டிசெம்பர் மாத விடுமுறை ரத்து

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

ஒக்டோபர் மாதம் முதல் பாடசாலைகளை கட்டங்கட்டமாக திறப்பதற்கு எதிர்ப்பார்க்கின்றோம். அவ்வாறு பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டால் வழமையாக வழங்கப்படும் டிசெம்பர் மாத விடுமுறை இம் முறை வழங்கப்படமாட்டாது என்று கல்வி அமைச்சின் செய லாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

அதேவேளை, பாடசாலை களை நான்கு கட்டங்களாக ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி 200 இற்கும் குறைவான மாணவர்கள் கல்விகற்கும் பாடசாலைகள் விரைவில் திறக்கப்படவுள்ள தாக எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டிலே 200 இற்கும் குறைவான மாணவர்கள் கல்விகற்கும் 5, 131 பாடசாலைகள் உள்ளதாகவும், அவ ற்றில் தரம் ஒன்று முதல் ஐந்து வரையான வகுப்புகள் உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை 3, 884 எனவும் அதி காரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அந்த வகையில் தரம் ஒன்று முதல் ஐந்து வரையான வகுப்புகள் உள்ள பாடசாலைகளை திறக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# தேர்தல் முறைமை சீராக்கல் அறிக்கை நவம்பரில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

தேர்தல் முறைமை சீராக்கல் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி முன்வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.


அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இந்த குழுவிடம் பல அரசியல் கட்சிகள் தமது பரிந்துரைகளை முன்வைத்திருந்தன.

அதனடிப்படையில் தயாரிக்கப்படும் அறிக்கை ஜனாதிபதியிடம் எதிர்வரும் நவம்பர் மாத இறுதியில் கையளிக்கப்படவுள்ளது. (நி-5)






# நாக்கைப் பிளந்த யாழ். இளைஞன்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் தனது நாக்கினை சத்திர சிகிச்சை மூலம் இரண்டாக பிளந்த புகைப்படம் ஒன்றை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பச்சை குத்தும் கடையொன்றை நடத்தி வரும் இளைஞனே இவ் வாறு தனது நாக்கின் முன்பகுதியை இரண்டாக வெட்டியுள்ளார். குறித்த நபர் காலிக்குச் சென்று சத்திர சிகிச்சை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7-33)

# அரிசியின் விலை அதிகரிக்கும்

(கொழும்பு)

எதிர்காலத்தில் சந்தையில் அரிசியின் விலை அதிகரிக்கும் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கட்சியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா இதனை தெரிவித்தார்.

சந்தையில் அரிசி தட்டுப்பாடு நிலவும் நேரத்தில் உரத்தின் இறக்குமதியை அரசாங்கம் கட்டுப்படுத்தியுள்ளதால் நெல் அறுவடை குறையும் இதேவேளை சந்தையில் எரிவாயு மற்றும் பால்மா போன்ற அத்தியாவசிய பொருட்களுக்கு பற்றாக்குறை இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (நி-5)



### இறுதி ஓவரில் திக் திக் திக்...

# மாஸ் காட்டிய ஜடேஜா சென்னை திரில் வெற்றி

சென்னை சூப்பர் கிங்ஸ்- கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகளுக்கு இடையிலான ஐ.பி.எல். 2021 கிரிக்கெட்டின் 38ஆவது லீக் ஆட்டம் அபுதாபியில் நடைபெற்றது. கொல்கத்தா நைட் ரைடர்ஸ் கப்டன் மோர்கன் டாஸ் வென்று பட்டிங் தேர்வு செய்தார்.

கொல்கத்தா அணியின் ராகுல் திரிபாதி 33 பந்தில் 45 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். தினேஷ் கார்த்தி அதிரடியாக விளையாடி 11 பந்தில் 26 ரன்கள் அடிக்க கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 171 ரன்கள் சேர்த்தது. நிதிஷ் ராணா 27 பந்தில் 37 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் ஷர்துல் தாகூர், ஹசில்வுட் ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

பின்னர் 172 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் சென்னை சூப்பர் கிங்ஸ் களம் இறங்கியது. தொடக்க வீரர்கள் ருதுராஜ் கெய்க் வாட், டு பிளிஸ்சிஸ் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ருதுராஜ் கெய்க்வாட் 28 பந்தில் 40 ரன்களும், டு பிளிஸ்சிஸ் 30 பந்தில் 43 ரன்களும் எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த மொயீன் அலி 28 பந்தில் 32 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதன்பின் வந்த அம்பதி ராயுடு 10 ரன்னிலும், சுரேஷ் ரெய்னா 11 ரன்னிலும், டோனி 1 ரன்னிலும் ஆட்டமிழந்தனர். இதனால் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு சிக்கல் ஏற்பட்டது.

கடைசி 2 ஓவரில் 26 ரன்கள் தேவைப்பட்டது. 19ஆவது ஓவரை பிரதித் கிருஷ்ணா வீசினார். இந்த ஓவரின் முதல் இரண்டு பந்துகளில் இரண்டு ரன்கள் அடிக்கப்பட்டது. 3ஆவது மற்றும் 4ஆவது பந்தை இமாலய சிக்சருக்கு தூக்கினார் ஜடேஜா. அதோடு மட்டுமல்லாமல் அடுத்த இரண்டு பந்துகளையும் பவுண்டரிக்கு விரட்டினார்.

கடைசி ஓவரை சுனில் நரைன் வீசினார். கடைசி இரண்டு பந்தில் 1 ரன் தேவைப்பட்டது. 5ஆவது பந்தை சந்தித்த ஜடேஜா அவுட் ஆனார்.

இதனால் கடைசி பந்தில் ஒரு ரன் தேவைப்பட்டது. தீபக் சாஹர் களம் இறங்கினார். சாஹர் ஒரு ரன் அடிக்க சென்னை சூப்பர் கிங்ஸ் 2 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 10 போட்டிகளில் 8இல் வெற்றி புள்ளிகள் பட்டியலில் முதல் இடம் பிடித்ததுடன் பிளே-ஓப் சுற்று வாய்ப்பையும் உறுதி செய்தது சென்னை. (4-6)

# ஹர்ஷல் ஹெட்ரிக் பெங்களூர் அசத்தல்



ராயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதும் ஐ.பி.எல். 2021 கிரிக்கெட் லீக் தொடரின் 39 ஆவது லீக் ஆட்டம் டுபாயில் நடைபெற்றது. மும்பை இந்தியன்ஸ் கப்டன் ரோகித் சர்மா டாஸ் வென்று பந்து வீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி, முதலில் பட் செய்த ஆர்.சி.பி. அணி 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 165 ரன்கள் எடுத்தது.

இதையடுத்து, 166 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மும்பை இந்தியன்ஸ் களமிறங்கியது.

இறுதியில், மும்பை அணி 111 ரன்களுக்கு ஓல் அவுட்டானது. இதனால் ஆர்.சி.பி அணி 54 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

குறிப்பாக, 17ஆவது ஓவரை வீசிய ஹர்ஷல் பட்டேல் ஹர்திக் பாண்ட்யா, பொல்லார்டு, ராகுல் சாஹர் ஆகியோரை ஹெட்ரிக்கில் வீழ்த்தி அசத்தினார். (4-6)

## இன்றைய போட்டி vivo IPL

3.30Pm KKR vs DC

7.30Pm MI vs PBKS




# இராசிபலன்

23.09.2021
புரட்டாதி 12, செவ்வாய்க்கிழமை
சப்தமி பிற்பகல் 4.24 மணிவரை
மிருகசீரிடம் முன்னிரவு 7.48 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
சந்திராஷ்டமம்: விசாகம், அனுசம் வளவன்

**மேஷம்** — குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று நடைபெறலாம், பகையொன்று நட்பாகலாம், சவால்களை சமார்த்தியமாக சமாளிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும்

**ரிஷபம்** — தொலை பேசி வழியில் புதிய தகவல்கள் வந்து சேரலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வியாபார விருத்தியுண்டு, சுபகாரியப் பேச்சுக்கள் சாதகமாகும்.

**மிதுனம்** — ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயமாகலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், போசன சுகமுண்டு.

**கடகம்** — தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களினால் ஆற்றல் பெறுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்

**சிம்மம்** — இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்

**கன்னி** — தொழிலில் புதிய திட்டங்கள் தீட்டி ஆதாயம் காண முற்படுவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**துலாம்** — உறவினர்கள் வழியில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம்.

**விருச்சிகம்** — கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல் ஏற்படலாம், கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு** — சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

**மகரம்** — சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், செய்தொழிலில் மேன்மையுண்டு.

**கும்பம்** — சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மீனம்** — புதிய நபர்களின் சந்திப்பால் பொருளாதார நிலை உயரும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

உன் உள்ளத்தைச் சீர்ப்படுத்த உளன் உணர்வுகளை சீர்ப்படுத்து

# கூகுளுக்கு வயது 23



அனைவருக்கும் பிடித்த தேடு பொறியான கூகுள் நேற்று தனது 23 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடியது.

# கண்ணீர் அஞ்சலி

அமரர் மகேஸ்வரி இராசையா

மலர்வு: 1938.07.11
உதிர்வு 2021.09.26



புங்குடுதீவு- நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க நெறிப்பாளர் சபை உறுப்பினரும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தருமான
**இராசையா உதயகுமார்**
அவர்களின் அன்புத் தாயார்
**அமரர் மகேஸ்வரி இராசையா**
அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்
புங்குடுதீவு நயினாதீவு
பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், புங்குடுதீவு.

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
## கோப்பாய் உப அலுவலகம்
## ஆதனப்பெயர்மாற்ற அறிவித்தல் தொடர்பானது

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை கோப்பாய் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 14, டச்சு வீதி, ஆதன இலக்கம் 189/7 (பகுதி) என்ற இலக்கத்தைக் கொண்டதும் "வண்ணான் கடவை" நிலப்பரப்பு 10 குழி 01.80 கொண்ட கிராமசேவையாளர் பிரிவு : J /259, கோப்பாய் கோவிற்பற்று, கோப்பாய் தெற்கு இறையில் அமைந்துள்ள ஆதனத்தின் உரிமையாளர் பெயர் சிவஞானம் சிவக்கொழுந்து என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தின் ஓராவது பகுதியினை 11/16, அரசடி அம்மன் வீதி, 01 ஆம் ஒழுங்கை, திருநெல்வேலியினை சேர்ந்தரமேஸ் றஜினா (788122209V) என்பவர் நிலப்பரப்பு 1 குழி 09.51 இற்கும், குறித்த ஆதனத்தின் இரண்டாவது பகுதியினை இல. 13, பாற்பண்ணை வீதி, திருநெல்வேலியினை சேர்ந்த கலாநிதி கிருஸ்ணகோபால் (535313725V) என்பவர் நிலப்பரப்பு 1 குழி 11.92 இற்கும் உரிமை கோருகின்றார்கள்.

மேற்குறித்த இல: 189/7, டச்சு வீதி ஆதனமானது (நிலப்பரப்பு 10 குழி 01.80) சமர்ப்பிக்கப்பட்ட மாதிரித் திரட்டின் படி பிரசித்த நொத்தாரிசு கதிரேசு சிவசுப்பிரமணியம் அவர்களால் எழுதப்பட்ட 8665 ஆம் இலக்க 14.02.2013 ஆம் திகதிய பிரகடன உரித்து உறுதி மூலம் சண்முகம் சிவகுமார் பெண் மதுரவசனிக்கு காலம் சென்ற பிதா சிவஞானம் சிவக்கொழுந்துக்கு சொந்தமாக இருந்து எதுவித தங்குதடையின்றி பிதா வழிமுதுசமாக தடையற்று வந்தடைந்தது. அதன் பின்னர் பிரசித்த நொத்தாரிசு கதிரேசு சிவசுப்பிரமணியம் அவர்களால் எழுதப்பட்ட 8684 ஆம் இலக்க 19.02.2013 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் சண்முகம் சிவகுமார் பெண் மதுரவசனி என்பவரினால் ரூபா 300,000/= தரப்பற்றிக்கொண்ட தன் மூலம் தடையற்ற ஆட்சியுமானது என கனகசபை முரளிதரன் (702870330V) என்பவரிற்கு கிரயமாக வந்தடைந்தது.

மேற்படி ஆதனத்தின் ஓராவது பகுதி பிரசித்த நொத்தாரிசு பிரியந்தி முத்துராஜா அவர்களால் எழுதப்பட்ட 12 ஆம் இலக்க 07.09.2020 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் கனகசபை முரளிதரன் (702870330V) என்பவரினால் ரூபா 2,000,000/= தரப்பற்றிக்கொண்ட தன் மூலம் தடையற்ற ஆட்சியுமானது என ரமேஸ் றஜினா (788122209V) இற்கு கிரயமாக வந்தடைந்தது. அடுத்து ஆதனத்தின் இரண்டாவது பகுதி பிரசித்த நொத்தாரிசு பிரியந்தி முத்துராஜா அவர்களால் எழுதப்பட்ட 11 ஆம் இலக்க 07.09.2020 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் கனகசபை முரளிதரன் (702870330V) என்பவரினால் ரூபா 2,000,000/= தரப்பற்றிக்கொண்ட தன் மூலம் தடையற்ற ஆட்சியுமானது என கலாநிதி கிருஸ்ணகோபால் (535313725V) இற்கு கிரயமாக வந்தடைந்தது.

மேற்படி ஓராவது பகுதி நிலப்பரப்பு 1 குழி 09.51 இற்கு எல்லைகளாக வடக்கு கலாநிதி கிருஸ்ணகோபாலுக்குரிய ஆதனம். கிழக்கு முக்குறுணிப்பிள்ளையார் வீதிக்கு போக்குவரத்து செய்யும் பாதை நிலம். தெற்கு இராமச்சந்திரன் ஞானரத்தினத்துக்குரிய ஆதனம். மேற்கு தம்பித்துரை ஜெயசீலனுக்குரிய ஆதனம். இவ்வாதனம் உத்தரவு பெற்ற நில அளவையாளர் சி.விஸ்வநாதன் அவர்களால் அளந்து வரையப்பட்ட 790 ஆம் இலக்க 25.07.2020 ஆம் திகதிய படத்தில் Lot – 03 என குறித்துக்காட்டப்பட்டுள்ளது. இரண்டாவது பகுதி நிலப்பரப்பு 1 குழி 11.92 இற்கு எல்லைகளாக வடக்கு சுபாரத்தினம் பெண் பரிபூரணத்துக்குரிய ஆதனம், கிழக்கு கணேசமூர்த்தி பெண் சசிகலாவிற்குரிய ஆதனம், தெற்கு ரமேஸ் பெண் ரஜினாவிற்குரிய ஆதனம். மேற்கு தம்பித்துரை ஜெயசீலனுக்குரிய ஆதனம். இவ்வாதனம் உத்தரவு பெற்ற நில அளவையாளர் சி.விஸ்வநாதன் அவர்களால் அளந்து வரையப்பட்ட 790 ஆம் இலக்க 25.07.2020 ஆம் திகதிய படத்தில் Lot – 02 என குறித்துக்காட்டப்பட்டுள்ளது.

இவ் ஓராவது பகுதி ஆதனத்தினை ரமேஸ் றஜினா என்ற பெயருக்கும், இரண்டாவது பகுதி ஆதனத்தினை கலாநிதி கிருஸ்ணகோபால் என்ற பெயருக்கும் ஆதனப்பதிவேட்டில் பதிவது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 27.10.2021 ஆம் திகதிக்கு முன்னர் சபைக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஓராவது பகுதி ஆதனமானது ரமேஸ் றஜினா என்ற பெயருக்கும், குறித்த இரண்டாவது பகுதி ஆதனமானது கலாநிதி கிருஸ்ணகோபால் என்ற பெயருக்கும் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சனைகளையும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதனையும் சேவையுணர்வுடன் அறியத்தருகின்றேன்.

தியாகராஜா நிரோகஷ்
தவிசாளர்
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்
28.09.2021

C-2701



கோப்பாய் இடைநிலை சிகிச்சை நிலையத்தில் பணியாற்றுகின்ற சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தொடர்ச்சியான சேவையினைப் பாராட்டி அங்கு பணி புரிகின்ற 42 சுகாதார அலுவலர்களுக்கு எஸ். வி முருகேசு நிறுவனத்தினரின் நிதி அனுசரணையுடன் சாந்திகம் நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் சாந்திகம் நிறுவனத்தின் நிர்வாக உறுப்பினர்களால் கௌரவிப்பும் பாராட்டு நிகழ்வும் ஒழுங்கு செய்யப்பட்டு அவர்களுக்கான பரிசுப் பொதிகள் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன.

## பல வழக்குகளுடன் தொடர்புடைய

# மூன்று சந்தேக நபர்கள் இளவாலையில் சிக்கினர்

(அராலி)

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பனிப்புலம் பன்னாமூலை பகுதியில் ஒன்பது வழக்குகளுடன் தொடர்புடைய 3 சந்தேக நபர்கள் இளவாலை பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பன்னாமூலை பகுதியைச் சேர்ந்த ஒன்பது வழக்குகளுடன் தொடர்புபட்ட 24 வயதுடைய சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் தேடி வந்த நிலையில் குறித்த சந்தேக நபர் தலைமறைவாகியிருந்தார்.

இந்நிலையில் இளவாலை பொலிஸ் புலனாய்வு பிரிவிற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேக நபர்தலைமறைவாகியிருந்த இடம் முற்றுகையிடப்பட்டு சந்தேக நபரை பொலிஸார் கைது செய்தனர்.

மேலும் கைது செய்த நபரிடம் இருந்து 2g15mg ஹெரோயின் மீட்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இளவாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட போது குறித்த சந்தேக நபருடன் திருட்டிற்கு உடந்தையாக இருந்த மேலும் இருவரை இளவாலைப் பொலிஸார் கைது செய்தனர்.

இதனைத் தொடர்ந்து மூன்று சந்தேக நபர்கள் மீதும் இளவாலை பொலிஸார் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்ததோடு நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

மூன்று சந்தேக நபர்களையும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார். (4-7-104)

# திருட்டில் ஈடுபட்டவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை இலந்தைக்குளம் வீதியில் ஓய்வுபெற்ற மருத்துவ தம்பதியரின் வீட்டில் இரவு வேளையில் திருட்டில் ஈடுபட்டவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து திருடப்பட்ட ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியாக ஐ பாட் மற்றும் இரண்டு ஐ போன் என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற நிலையில் அரியாலையைச் சேர்ந்த 24 வயதுடைய சந்தேக நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

திருட்டுச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டது. அதனடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணையிலேயே குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். (4-7-18-33)



கல்விப் பொதுச் சாதாரண தரப் பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் திறமைச் சித்திகள் பெற்ற சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த மாணவ- மாணவிகளிற்கு டென்மார்க்கில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் திருமதி- சிவனேஸ்வரி மகேந்திரனின் நிதிப் பங்களிப்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (படம்: ரவிசாந்)



தியாகதீபம் திலீபனின் 34 ஆவது ஆண்டு நினைவேந்தல் நாளின் இறுதி நாளான நேற்று முன்தினம் இரு இளைஞர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்தவங்கிப் பிரிவுக்கு நேரடியாகச் சென்று இரத்தம் வழங்கியுள்ளனர். (படம்: ரவிசாந்)

# வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் உட்பட மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பல இடங்களில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் 2019 ஆம் ஆண்டிலிருந்து தலைமறைவாக இருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கும், மானிப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கும் கிடைத்த இரகசிய தகவலையடுத்து சுதுமலை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேக நபர் கொக்குவிலை சேர்ந்தவரெனவும். மேலும் குறித்த சந்தேகநபரின் தாய் வெளிநாட்டில் இருப்பதாகவும் அவரின் உதவியுடன் ஓரிரு மாதத்தில் இலங்கையை விட்டு தப்பிக்க இருந்த நிலையில், குறித்த நபர் மாறுவேடத்தில்அடையாளம்காண முடியாதவாறு உருமாற்றம் செய்து தலைமறைவாகியிருந்த நிலையில் மானிப்பாய் சுதுமலையில் வைத்து இவருடன்மூன்று பேர்கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார்தெரிவித்தனர். (4-7-33)




# படகு எஞ்சின் திருடியவர் மடக்கிப் பிடிப்பு

(அராலி)

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குசுமாந்துறை கடற்கரையில் படகு ஒன்றின் எஞ்சினை திருடிய குற்றச்சாட்டின் கீழ் சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கைது செய்யப்பட்டவருக்கும் எஞ்சினை பறிகொடுத்தவருக்கும் இடையே சில நாட்களுக்கு முன்னர் முரண்பாடு ஏற்பட்டது. இந்த நிலையில் அவரது படகின் எஞ்சின்களவாடப்பட்ட நிலையில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்தார்.

அவரது முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட இளவாலை பொலிஸார் எஞ்சினுடன் சந்தேக நபரை கைது செய்தனர். (4-7-104)

# கால்நடை திருட்டு அதிகரிப்பு; கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிப் பகுதியில் அண்மைக்காலமாக ஆடு, மாடு, கோழி போன்ற கால்நடைகளை கடத்திச் சென்று விற்பனை செய்யும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

இதனால் கால்நடை வளர்ப்பாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இராசவீதி மாசுவன் சந்தி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி தெற்கு போன்ற கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் கால்நடைகளை திருடி அடைக்கப்பட்ட வாகனங்களில் கடத்திச் செல்லும் நபர்களினால் கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் நபர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வருகின்றன.

ஆடு, மாடுகள், கோழி காணாமல் போவதனால் பல இலட்சம் ரூபாவுக்கும் மேல் நட்டத்தினை கால்நடை வளர்ப்பாளர்கள் எதிர்நோக்கியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நீர்வேலி வடக்கு பிரதேசத்தில் 3 மாடுகள் கடத்தப்பட்ட சம்பவம் நடைபெற்றுள்ளது.

எனவே நீர்வேலி பிரதேசத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் கால்நடை கடத்தல்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என கால்நடை வளர்ப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-7)

# நாட்டை மீள திறக்க சுகாதாரப் பரிந்துரைகளை முன்வைக்குமாறு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்கை ஒக்டோபர் முதலாம் திகதி தளர்த்துவதற்கு தேவையான உரிய சுகாதார வழிகாட்டல்கள் அடங்கிய பரிந்துரைகளை முன்வைக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

தற்போதைய தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு ஒக்டோபர் முதலாம் திகதி அதிகாலை 4 மணிக்கு முடிவடையவுள்ள நிலையில் சுகாதார, போக்குவரத்து மற்றும் ஏனைய பிரிவுகளினால் இந்தப் பரிந்துரைகள் வழங்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் ஊரடங்குச் சட்டத்தினை மேலும் நீடிக்காமல் இருக்க அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

மேலும் தற்போது நடைபெறும் சிறுவர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் பணியில் இதுவரை எந்தச் சிக்கலும் பதிவாகவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். இதற்கிடையில் ஊரடங்கு உத்தரவை நீக்குவதன் மூலம் நாட்டை மீண்டும் திறக்க சுகாதார பரிந்துரைகள் மற்றும் கட்டுப்பாடுகள் குறித்து விரிவான திட்டத்தை வகுக்க கொரோனாத் தடுப்பு செயலணி முடிவு செய்துள்ளது. (நி-5)

# கோட்டா அரசிற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்

## மைத்திரி உறுதி



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் அதேவேளை பண்டாரநாயக்கவின் கொள்கைகளையும் பாதுகாத்துக் கொண்டு முன்னோக்கிப் பயணிப்போம்" என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகத் தலைவரும் இலங்கையின் 4ஆவது பிரதமருமான எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கவின் 62 ஆவது நினைவு தினம் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

ஹொரகொல்லவிலுள்ள பண்டாரநாயக்கவின் நினைவிடத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மலரஞ்சலி செலுத்திய பின் மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி-5)


# உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரின் உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு:

தொலைபேசி:

076 097 3127

021 221 7603

Viber: 076 636 3378

E.mail:

valampurii@yahoo.com


# தேர்தல்களை தாமதமின்றி நடத்துங்கள்

## எதிர்க்கட்சி வலியுறுத்து

(கொழும்பு)

மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை தாமதமின்றி நடத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார். பொத்துவில் வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இந்தத் தேர்தல்கள் மக்களின் துடிப்பை சரிபார்க்கும் வகையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார்.

மாகாண சபை மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்களை உடனடியாக நடத்துவதன் மூலம், இந்த நாட்டின் மக்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதை அரசாங்கம் உட்பட அனைவரும் அறிய முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# நாட்டை மீட்பதற்கான போராட்டம் விரைவில் முன்னெடுக்கப்படும்- சஜித்



(கொழும்பு)

ராஜபக்ஷ அரசாங்கத்திடம் இருந்து நாட்டை மீட்பதற்கான போராட்டம் விரைவில் முன்னெடுக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாட்டின் வளங்களை தமது தனிப்பட்ட சொத்துக்களைப் போன்று இந்த அரசாங்கம் விற்பனை செய்வதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். தேசிய சொத்துக்களை விற்பனை செய்யும் இந்த நடவடிக்கைக்கு எதிராக அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு பதிலாக நாட்டைக் காட்டிக்கொடுக்கும் திட்டத்தையே அரசாங்கம் முன்னெடுக்கின்றது என்றும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். இதேவேளை அண்மையில் கெரவலப்பிட்டி மின் நிலையத்தை இரகசியமாக விற்று,அண்மைய வரலாற்றில் மிகப் பெரிய துரோகத்தை அரசாங்கம் செய்துள்ளது என்றும் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டினார். (நி-5)

# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாநகர சபை

## வியாபார நிலையங்களில் கட்டணக்கழிவகற்றல் சேவை

யாழ்.மாநகர சபை ஆளுகைக்குட்பட்ட இருநூற்றைம்பதுக்கும் (250) அதிகமான தனியார் கடைகள், விடுதிகள் ஆகியவற்றிலிருந்து தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை (உணவுக் கழிவுகள், உக்கக்கூடியவை, பொலித்தீன், பிளாஸ்ரிக், கண்ணாடி) மக்களுக்கு இடையூறு இல்லாமல் மூடிய வாகனத்தில் பாதுகாப்பான முறையில் அகற்றி காக்கைதீவு மற்றும் கல்லுண்டாயில் அமைந்திருக்கும் கழிவு சேர் நிலையத்திற்கு கொண்டு சென்று கழிவகற்றுவதற்காக ஒரு வருட காலத்திற்கு தகுதி வாய்ந்த சேவை வழங்குநரிடமிருந்து யாழ்.மாநகர சபை பெறுகைக்குழு தலைவரால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் விண்ணப்பங்களை யாழ் மாநகரசபை, பொதுச் சுகாதாரப் பொறியியல் பிரிவில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்விப் படிவங்களை **28.09.2021 -12.10.2021** வரையான காலப்பகுதியில் கடமை நாட்களில் பி.ப 2.30 மணிவரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000.00 (வரி உள்ளடங்கலாக) பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். குறித்த சேவை தொடர்பான விபரங்கள் அடங்கிய ஆவணத்தினை 12.10.2021 ஆம் திகதி பி.ப 2.30 மணி வரை கடமை நாட்களில் யாழ். மாநகரசபை, பொதுச் சுகாதாரப் பொறியியல் பிரிவில் பார்வையிடலாம்.

கேள்வி வைப்புப் பணமாக ரூபா 20000 பணமாக செலுத்துதல் வேண்டும்.

கேள்விப் படிவங்களை 13.10.2021 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் **தலைவர் , பெறுகைக்குழு, மாநகரசபை, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது ஆணையாளர் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியினுள் இடுதல் வேண்டும்.

கேள்வி திறத்தல் 13.10.2021 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும் எந்தவொரு கேள்வியையும் நிராகரிக்கும் உரிமை கேள்விச் சபைக்குரியதாகும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**யாழ்.மாநகரசபை.**

**28.09.2021**

(C-2700)

# கொவிட்-19 தொற்றால் மனிதர்களது ஆயுட்காலம் பாரிய அளவில் குறைந்தது

## ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம்

(லண்டன்)

கொவிட்-19 தொற்றுநோய் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு 2020 ஆம் ஆண்டில் மனிதர்களது ஆயுட்காலத்தை மிகப்பெரிய அளவில் குறைத்துள்ளதாக ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

விஞ்ஞானிகளால் பகுப்பாய்வு செய்யப்பட்ட 29 நாடுகளின் பெரும்பாலான - ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் சிலி ஆகிய நாடுகளின் தரவு கடந்த ஆண்டு ஆயுட்காலம் குறைவடைந்ததை வெளிக்காட்டுகின்றது.

2019 இன் தரவுகளுடன் ஒப்பிடும்போது 2020 ஆம் ஆண்டில் 22 நாடுகளில் மனிதர்களுடைய ஆயுட்காலம் ஆறு மாதங்களுக்கு மேலாக குறைவடைந்துள்ளது.

Worldometers.com இன் தரவுகளின்படி, உலகம் முழுவதும் 47 இலட்சத்து 61 ஆயிரத்து 895 பேர் இதுவரை கொவிட் -19 இற்கு பலியாகியுள்ளனர்.

மேலும் உயிரிழப்பு எண்ணிக்கையில் அமெரிக்கா தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது, அதற்கு அடுத்த படியாக பிரேஸிலும், இந்தியாவும் உள்ளன. (7-4)

# ஓமனில் பறவைகள் இறக்குமதிக்கு தடை

(மஸ்கட்)

இந்தியா, பாகிஸ்தான் நாடுகளில் இருந்து ஓமனுக்கு பறவைகள் இறக்குமதிசெய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஓமன் வேளாண்மை, மீன் மற்றும் தண்ணீர் வள அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது,

இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாட்டின் சில பகுதிகளில் இருந்து பறவைகளை இறக்குமதி செய்வதைத் தவிர்த்துக் கொள்ள கால்நடை பராமரிப்பு ஆணையம் பரிந்துரை செய்திருந்தது.

இந்தத் தடையானது மறு அறிவிப்பு வரும் வரை தொடரும்.

அதுவரை இந்தப் பகுதியில் இருந்து பறவைகள் மற்றும் அவை சார்ந்த பொருட்கள் இறக்குமதி செய்யப்படாது, என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-4)

# ஆபத்தான கொரோனா மாறுபாடு அமெரிக்காவில் கண்டுபிடிப்பு

## நிபுணர்கள் எச்சரிக்கை

(வோஷிங்டன்)

உயிருக்கு ஆபத்தை உண்டாக்கும் கொரோனா மாறுபாடு அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டதாக நிபுணர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

அந்த வகையில் R.1 மாறுபாடு குறித்து நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள் ளனர். இந்த மாறுபாடு கடந்த ஆண்டு ஜப்பானில் முதன் முதலாக கண்டு பிடிக்கப்பட்டது.

தற்போது அமெரிக்கா உட்பட 35 நாடுகளில் வேகமாக பரவி வருகிறது. நோய் கட்டுப்பாட்டு மையம் வெளியிட்ட அறிக்கையில் அதிக ஆபத்தான R.1 கொரோனா மாறுபாடு மீண்டும் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

R.1 மாறுபாடு காரணமாக பாதிப்புகள் குறைவாக இருந்தாலும் அது பயங்கர ஆபத்து என்று நிரூபிக்கப்பட்டதால் அலட்சியம் காட்ட வேண்டாம்என்றுநிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (7-4)

# அமெரிக்காவின் எதிர்ப்பை மீறி ஏவுகணை வாங்க முடிவு

## துருக்கி ஜனாதிபதி தெரிவிப்பு

(அங்காரா)

துருக்கி அரசு ரஷ்யாவிடம் இருந்து எஸ் 400 வகை ஏவுகணை அமைப்பை வாங்கியதற்கு ரஷ்யாவின் ஏவுகணை, பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடும் என அமெரிக்கா தெரிவித்தது. இது தொடர்பாக நேட்டோ கூட்டமைப்பின் உறுப்பு நாடான துருக்கி மீது, அமெரிக்கா கடந்த ஆண்டு பொருளாதாரத் தடை விதித்தது.

இந்த நிலையில், ரஷ்யாவிடம் இருந்து மேலும் ஒரு எஸ் 400 ஏவுகணை அமை



ப்பை வாங்க முடிவு செய்திருப்பதாக துருக்கிஅதிபர் தாயீப் எர்டோகன் அறிவித்துள்ளார். தனியார் செய்தி நிறுவனத்திற்கு அவர் அளித்த பேட்டி ஒன்றில் இது குறித்த தகவலை அவர் கூறியுள்ளார்.

மேலும் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட பாட்ரியட் ஏவுகணையை வாங்குவதற்கான வாய்ப்பு தங்களுக்கு வழங்கப்படவில்லை என்று தெரிவித்துள்ள அவர், எப்-35 ஜெட் விமானத்திற்கான 1.4 பில்லியன் டொலர்களை துருக்கிஅரசு செலுத்திய பிறகும், அமெரிக்கா அதனை இன்னும் தங்களிடம் ஒப்படைக்க வில்லை என்றும் கூறியுள்ளார். (7-4)

# ஜேர்மனி பொதுத்தேர்தல் முடிவுகள்

# 16 வருட ஆட்சி முடிவுக்கு வந்தது



(பெர்லின்)

ஜேர்மனில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற பொதுத் தேர்தலில் சமூக ஜனநாயகக் கட்சியினர் வெற்றியைப் பெற்றுள்ளனர்.2005 முதல் ஏஞ்சலா மெர்க்கலின் கீழ் 16 வருடங்கள் ஆட்சி செய்து வந்த பழைமை வாத கிறிஸ்தவ ஜனநாயக கட்சியின் ஆட்சி இத்துடன் முடிவுக்கு வருகிறது.

மெர்க்கலின் பழைமை வாதக் கூட்டணிக்கு 24.5% வாக்குகள் கிடைத்து 194 இடங்களை கைப்பற்றிய நிலையில், மத்திய-இடது சமூக ஜனநாயக வாதிகள் கட்சி 26% வாக்குகளைப் பெற்று 205 இடங்களில் வெற்றி பெற்றுள்ளனர்.

தற்போது ஏதேனும் ஒரு கட்சி பெரும்பான்மையை பெற்று ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக மற்ற கட்சிகளுடன் கூட்டணியை அமைக்க வேண்டும். கிறிஸ்மஸ் விடுமுறைக்குள் கூட்டணிகள் முடிவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், Olaf Scholz ஜேர்மனியின் அடுத்த சான்செலராக பதவியேற்கவுள்ளார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், இதற்கிடையில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த மெர்க்கலின் CDU கட்சியின் தலைவர் Armin Laschet, "தேர்தலில் முதலிடத்தை பிடித்த கட்சியில் இருந்துதான் எப்போதும் சான்செலர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்பது அல்ல, என்னை பொறுத்தவரை, ஒவ்வொரு கூட்டணிக் கட்சியும் சம்பந்தப்பட்ட, அனைவரும் வெளிப்படையாக காணக்கூடிய ஒரு அரசாங்கத்தை நான் விரும்புகிறேன் - வெறும் சான்செலர் மட்டும் பிரகாசிக்கக்கூடிய ஒரு அரசாங்கமாக இருக்கக்கூடாது" என்றார். (7-4)

# முகச்சவரம் செய்வதற்கு தலிபான்கள் தடை விதிப்பு

(காபூல்)

எந்தவொரு ஆணுக்கும் முகச்சவரம் செய்யக் கூடாது என ஆப்கானிஸ்தானில் ஹெல்மன் பகுதியில் வசிக்கும் முடி திருத்துநர்களுக்கு தலிபான்கள் அறிவுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முகச்சவரம் செய்வதானது இஸ்லாமிய சட்டத்திற்கு முரணானது என தலிபான் அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன், குறித்த உத்தரவை மீறுபவர்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, காபூல் தலைநகரிலும் ஆண்களுக்கு முகச்சரவம் செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-4)

# இன்று வரலாற்றில்

- 1066 - முதலாம் வில்லியம் இங்கிலாந்தை முற்றுகையிட்டமை.
- 1448 - முதலாம் கிறிஸ்டியன் டென்மார்க் மன்னனாக முடி சூடியமை.
- 1791 - பிரான்ஸ் ஐரோப்பாவில் யூதர்களை அடிமைத்தளையில் இருந்து விடுவித்து முதலாவது நாடானமை.
- 1795 - யாழ்ப்பாணத்தை ஜெனரல் ஸ்டுவேர்ட் தலைமையிலான பிரித்தானியப் படைகள் கைப்பற்றியமை.
- 1895 - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தற்போதைய கட்டடம் கட்டப்பட்டமை.
- 1928 - அலெக்சாண்டர் பிளெமிங் பெனிசிலினைக் கண்டுபிடித்தமை.
- 1950 - இந்தோனேசியா ஐ.நாவில் இணைந்தமை.
- 2005 - ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளைத் தடை செய்தமை
- 1929 - லதா மங்கேஷ்கர், (இந்தியப் பின்னணிப் பாடகி) ஜனன தினம்.
- 1994 - கே. ஏ. தங்கவேலு, (தமிழ் நகைச்சுவை நடிகர் )நினைவு தினம்.

# நாடளாவிய ரீதியில் எட்டு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தாதிய சங்கத்தினரால் பணிப் புறக்கணிப்பு

**(மன்னார்)**

**எட்டுக் கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் 44 தொழிற்சங்கங்கள் இணைந்து நேற்றுக் காலை 7 மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை அரைநாள் வேலை நிறுத்தப் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.**







கொவிட்-19 தடுப்புச் செயற்றிட்டத்தை வலுப்படுத்த சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் தொழிற்சங்கக் குழு ஒன்றை நியமித்தல், வைத்தியசாலை கொவிட் குழுவில் தொழிற்சங்க பிரதிநிதிகளை நியமித்தல், கொரோனாக் கால விசேட கொடுப்பனவினை வழங்குதல், விசேட விடுமுறை நாட்களில் கடமைக்கு சமூகமளித்தால் அதற்கான கொடுப்பனவை வழங்குதல், கொரோனாக் கால பாதுகாப்பு அங்கிகள் மற்றும் முகக்கவசங்கள் போன்றவற்றை வழங்குதல், வட மாகாண சுகாதார ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்புதல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அரைநாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டம் காரணமாக நோயாளர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். அத்துடன் அவசர நோயாளர்களிற்கான உயிர் காப்பு சிகிச்சைகள் அனைத்தும் வழமை போல இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கடந்த புதன் கிழமை நாடளாவிய ரீதியாக வைத்தியசாலைப் பணிப்பாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து ஒரு மணி நேர வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் அவர்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமையினால் அரை நாள் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (7-4-6-30-60-285-299-316)

# சத்துமா உற்பத்தி நிலையம் அமைத்து தர கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி இராமநாதபுரம் பிரதேசத்தில் 383 பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான வாழ்வாதாரம் மற்றும் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் வகையில் சத்து மா உற்பத்தி தொழில் நிலையம் ஒன்றினை அமைத்து தருமாறு கோரியுள்ளனர்.

குறித்த பகுதியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் அதிகளவான நெல் உற்பத்தி செய்யப்படுவதுடன் ஏனைய பயிர்களான உழுந்து பயறு நிலக்கடலை போன்ற பயிர்கள் பயிரிடப்படுகின்றன. இவ்வாறான பயிர்களை உள்ளூரில் உற்பத்தி செய்வதன் மூலம் அதற்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டு உள்ளூரிலேயே தரமான அரிசி மாவினை உற்பத்தி செய்தல் மற்றும் சத்துணவு மாவு தயாரிந்து அவற்றை உள்ளூரிலேயே சந்தைப்படுத்துதல் மேலும் அயல் கிராமங்களிலும் வெளியிடங்களுக்கும் சந்தைப்படுத்த முடியும். இதனால் குறித்த குடும்பங்கள் பயனடைவதுடன் ஏனைய மக்களுக்கும் பயனுடையதாக அமையும். எனவே பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் சத்துமா உற்பத்தி நிலையம் ஒன்றினை அமைத்து தருமாறு கோரியுள்ளனர். (7-4-6-315)



பளையில் மாற்றுத்திறனாளி குடும்பத்தின் வாழ்வாதார பயிர்கள் விசமிகளால் நாசமாக்கப்பட்டதை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் பார்வையிட்டார். (படம்-தேவானந்தன்)

# 20 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது

(தர்மபுரம்)

தருமபுர பொலிஸ், பிரிவுக்குட்பட்ட தருமபுரம் பகுதியில், சட்டவிரோத கசிப்பு விற்பனை நடைபெறுவதாக, பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் விற்பனைக்காக வைத்திருந்த 20 லீற்றர் கசிப்பும் கைப்பற்றியதுடன் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டனர் என தருமபுர பொலிஸார் தெரிவித்தனர். (7-4-6-316)

# வீதி புனரமைப்பிற்கு இடையூறு விளைவித்த இணக்கச்சபை உறுப்பினர் மீது முறைப்பாடு

(நெளுக்குளம்)

வவுனியா வடக்கு புளியங்குளம் பழையவாடியில் வசித்துவரும் இணக்கசபை பெண் உறுப்பினர் ஒருவருக்கு எதிராக புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் ஐம்பது பேருக்கு மேற்பட்ட பொதுமக்கள் ஒன்றிணைந்து கையெழுத்திட்ட முறைப்பாடு ஒன்றினை நேற்று மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளனர் .

அம்முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது ,புளியங்குளத்திலிருந்து பழைய வாடிக்கு செல்லும் பிரதான வீதி ஜப்பான் அரசின் நிதி உதவியில் சீமெந்து வீதியாக புனரமைப்புச் செய்யப்பட்டுவருகின்றது . அப்பகுதியில் வசித்து வரும் இணக்கசபை பெண் உறுப்பினர் ஒருவர் குடியிருக்கும் காணியை குறித்த வீதி புனரமைப்புக்கு விட்டுக் கொடுக்க முன்வரவில்லை. இதனால் குறித்த வீதி புனரமைப்பு செய்யப்படுவதில் நீண்டகால தாமதங்கள் ஏற்பட்டு வருகின்றது .

அத்துடன் அவர் வசித்து வரும் காணியின் ஒரு பகுதியை வீதி புனரமைப்பு செய்வதற்கு விட்டுக்கொடுப்பதில் விடாப்பிடியாகவும் தனது இணக்கசபை உறுப்பினர் என்ற பதவியை பயன்படுத்தி பல்வேறு அழுத்தங்களையும் முரண்பாடுகளையும் அங்கு வசித்து வரும் மக்கள் மீது மேற்கொண்டு வருகின்றார். எனவே இப்பகுதியில் வசித்து வரும் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து குறித்த இணக்கசபை உறுப்பினருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினை மேற்கொள்ளப்பட்டு இதனை தீர்த்துக்கொள்வதற்கு முன்வந்துள்ளதாகவும் இவ் முறைப்பாட்டின் பிரதிகள் நெடுங்கேணி பிரதேச செயலகம் மற்றும் பிரதேசசபை ஆகியவற்றிற்கும் வழங்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-4-6-299)



கொவிட் 19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையத்தின் அறிவுறுத்தலின் பேரில் வன்னி பாதுகாப்புப் படைத் தலைமையகத் தளபதி மற்றும் 54 ஆவது படைப்பிரிவு தளபதியின் ஆதரவுடன் மன்னார் மாவட்ட ஆயுர்வேத வைத்திய சாலையை 50 படுக்கைகள் கொண்ட இடைநிலை பராமரிப்பு நிலையமாக மாற்றியமைக்கப்பட்டு அண்மையில் மன்னார் சுகாதார அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. (படம்-யதுபாஸ்கரன்)

# அரிசியின் விலையை அதிகரிக்காவிட்டால் உற்பத்தியில் இருந்து விலகுவோம்

## அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம்

**(கொழும்பு)**

**அரிசியின் விலை அதிகரிக்கப்படாதவிடத்து எதிர்வரும் நாட்களில் உற்பத்தி நடவடிக்கைகளிலிருந்து விலக நேரிடும் என இலங்கை அரிசி உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் தெரிவித்தனர்.**

அந்த சங்கத்தின் தலைவர் சுராஜ் ஜயவிக்ரம இதனைத் தெரிவித்தார்.

சகல அரிசி உற்பத்தியாளர்களும் அசௌகரியத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

கீரி சம்பா அரிசிக்காக 160 ரூபாய் என்ற சில்லறை விலை பெற்றுத் தரப்பட வேண்டும் என அரிசி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் குறிப்பிட்டார்.

சகல பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ள நிலையில் அரிசியின் விலையை மாத்திரம் குறைத்து வழங்குவது பொருத்தமற்றதெனவும் இலங்கை அரிசி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார். (நி-5)

### தொற்றிலிருந்து குணமடைந்த பின்

# பக்க விளைவுகளால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

கொவிட் தொற்றிலிருந்து குணமடைந்த பின்னர் பல்வேறு பக்க விளைவுகளால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை நாடளாவிய ரீதியில் அதிகரித்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த சிறுவர்கள் அனைவரும் கொவிட் தொற்றில் இருந்து குணமடைந்து பின்னர் வீட்டிற்கு சென்று பல்வேறு பக்க விளைவுகளால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்தக் குழந்தைகளுக்கு மூளை, இதயம் மற்றும் சிறுநீரகத்தில் பல்வேறு கோளாறுகள், அதிகரித்த இதய துடிப்பு, நிமோனியா மற்றும் தொடர்ந்து காய்ச்சல் போன்ற அறிகுறிகள் இருப்பதாகவும், இந்த சிறுவர்களில் பெரும்பாலானவர்கள் 5 முதல் 15 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் லேடி ரிட்ஜ்வே சிறுவர்கள் மருத்துவமனை மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

கொவிட் நோய்த்தொற்றிலிருந்து குணமடைந்த சிறுவர்கள் ஆறு மாதங்கள் வரை இத்தகைய அறிகுறிகளை உருவாக்க முடியும் என்றும் தொற்று நோயிலிருந்து மீண்ட சிறுவர்களை ஆறு மாதங்களுக்கும் மேலாக கவனிப்பது முக்கியம் என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)

# வர்த்தக உறவுகள் குறித்து பிரித்தானியா- இலங்கை பேச்சு

(கொழும்பு)

வர்த்தக உறவுகள் மற்றும் நல்லிணக்க செயன்முறை தொடர்பாக பிரித்தானியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

நியூயோர்க்கில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மற்றும் பிரித்தானிய இராஜாங்க அமைச்சர் ஆகியோருக்கு இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது இரு நாடுகளுடனும் தொடர்புடைய பல விடயங்கள் குறித்து பேசப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை வர்த்தகம், துறைமுக நகரம் மற்றும் பிற இடங்களில் கிடைக்கும் முதலீட்டு வாய்ப்புகள், சுற்றுலா துறையை மீண்டும் ஆரம்பிப்பது மற்றும் புலம்பெயர் நாடுகளுடனான உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும் பேசப்பட்டுள்ளது. (நி-5)

# இதுவரை 18,900 பேருக்கு டெங்கு

## பத்துப் பேர் உயிரிழப்பு

### தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தகவல்

(கொழும்பு)

நாட்டில் இவ்வாண்டு இதுவரை 18,900 இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளதுடன், 10 டெங்கு மரணங்களும் இடம்பெற்றுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவுத் தரவுகள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் எப்போதும் டெங்கு நோய் குறித்து விழிப்புடன் இருக்குமாறு தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு வலியுறுத்தியுள்ளது.

நீர் மற்றும் குப்பைகள் தேங்காத வகையில் சுற்றுச்சூழலைச் சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் டெங்கு நுளம்பு பரவலைக் கட்டுப்படுத்த முடியும்.

காய்ச்சல், தலைவலி, மூட்டுவலி மற்றும் 2 நாட்களுக்கு மேல் தொடரும் குமட்டல், வாந்தி போன்றவை டெங்கு நோயின் பொதுவான அறிகுறிகளாகும்.

இவ்வாறான அறிகுறிகள் இருந்தால் மருத்துவரை அணுகுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

### ஐஸ்வர்யம் அருளும் ஒளவையார் விரதம்



**ஒருநாள் அந்த வீட்டிற்கு வயதான மூதாட்டி வந்து பிச்சை கேட்டாள். அதற்கு வீட்டிலிருந்த பெண் "அள்ளிப் போட துள்ளிப்போட ஒன்றுமில்லை. குத்தலும் குவியலுமா கிடக்கு போட முடியாது" என்றாள். அதற்கு அந்த மூதாட்டி ஊர்க் களத்தில் உமி கிடக்கு. உமியைப் புடைச்சுப் பாரு அதில் கிடக்கிறதை எனக்குப் போடு என்றார்.**

**அந்தப் பெண் கூறியவாறு செய்ததில் கொஞ்சம் அரிசி கிடைக்க அதை அவருக்குப் போடுகிறாள். அப் போது அந்த மூதாட்டி ஒளவையை நினைத்து விரதம் இரு வாழ்க்கை வளமாகும் என்றாள்.**

**உடனே அந்தப் பெண் விரத வழிபாட்டிற்குரிய பொருள் ஏதுமில்லை என்றுகூற, அந்த மூதாட்டி எண்ணெய் வணிகனிடம் சென்று பாத்திரத்தில் எண்ணெய் வாங்கு. பிறகு பணம் இல்லை என்று திருப்பிக் கொடுத்துவிடு.**

**கிண்ணத்தில் மீதம் இருக்கும் எண்ணெயை எடுத்து விரதம் இரு என்றாள். இதேபோல் மற்றைய பொருட்களும்கிடைக்கும்என்றாள்.**

**இரவில் விரதத்திற்கு தீபம் எடுப்பதற்காக வெளியே வந்து புங்கமரம், புளிய மரத்தில் ஏறி நின்று பார்த்தாள். அப்போது தூரத்தில் வெளிச்சம் தெரிவதைக் கண்டு அங்கு சென்றாள். அது ஒரு சுடுகாடு. அங்கே பிணம் எரிந்து கொண்டிருந்தது. அங்கு நெருப்பு எடுத்துச் சென்றபோது பிரேதத்தில் இருந்து பிரித்து போடப்பட்ட பாடை, கம்பு, சட்டி போன்றவை தடுத்தன.**

**(தொடரும்)**

# தமிழ் அரசியல் கைதிகளை சந்தித்த நீதி அமைச்சர்

(கொழும்பு)

அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை நீதி அமைச்சர் அலி சப்ரி நேற்று முன்தினம் நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த நீதி அமைச்சர்,

"இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, அநுராதபுரம் சிறைச்சாலையில் தம்மை முழந்தாளிடச் செய்து துப்பாக்கி முனையில் அச்சுறுத்திய சம்பவமானது இன ரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஒன்று அல்லவென தமிழ் அரசியல் கைதிகள் புரிந்துகொண்டுள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பான விசாரணைகளில் தேவையற்ற அழுத்தங்கள் பிரயோகிக்கப்படவில்லை.

மனித உரிமைகள் ஆணைக்குழு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஏனைய எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்தபோது, சிறைச்சாலை அதிகாரிகளோ அல்லது வேறு தனிநபர்களோ அழுத்தங்களைப் பிரயோகித்தார்களா? என்பது தொடர்பில் தமிழ் அரசியல் கைதிகளிடம் விசாரித்தேன்.

எனினும், யாரும் தமக்கு அழுத்தம் கொடுக்கவில்லை என தமிழ் அரசியல் கைதிகள் என்னிடம் கூறினர். ஆகவே, இந்தச் சம்பவத்தை அரசியல் ஆக்க வேண்டிய தேவையில்லை.

தமிழ் அரசியல் கைதிகளுக்குச் சிறைச்சாலையில் பாதுகாப்பு தொடர்பிலோ, வசதிகள் தொடர்பிலோ பிரச்சினை இல்லை. தமது சொந்த இடங்கள் அருகில் இருப்பதாலேயே அவர்கள் யாழ்ப்பாணச் சிறைச்சாலைக்குச் செல்ல வேண்டும் என்று கோருகின்றனர்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் பாதுகாப்புப் பிரச்சினை இருக்குமாக இருந்தால், உயர் பாதுகாப்பு இடத்துக்கு அனுப்ப முடியும் என்று தமிழ் அரசியல் கைதிகளிடம் நான் கூறினேன்" என அலி சப்ரி தெரிவித்தார். (நி-5)

# கொரோனாவால் இறப்பவர்களில் அநேகமானோர் தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள்

**(கொழும்பு)**

**நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் ஆகியன கொரோனா மரணங்களுக்கு முக்கிய காரணிகளாகும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

கொரோனாத் தொற்றுக் குள்ளாகி உயிரிழப்பவர்களில் 80 வீதமானோர் குறித்த நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் என சுகாதார அமைச்சின் கொவிட்-19 தொடர்பான இணைப்பு செயலணியின் பணிப்பாளர், மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

இதனிடையே, வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்ட கொரோனா நோயாளர்களில் 75, 000 இற்கும் மேற்பட்டோர் பூரண குணமடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-5)



தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 34 ஆம் ஆண்டு நினைவேந் தலும் கேணல் சங்கரின் 20 ஆம் ஆண்டு நினைவேந்தலும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸ் ஆர் ஜொந்தையில் தியாகதீபம் நினைவுத்தூபி அமைந்துள்ள திடலில் மழைக்கு மத்தியில் மிகவும் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது.

# மேலுமொரு தொகை பைசர் தடுப்பூசிகள் நாட்டிற்கு



(கொழும்பு)

இலங்கைக்கு மேலும் ஒரு தொகை பைஸர் தடுப்பூசிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதற்கமைய, 31 ஆயிரத்து 560 பைஸர் தடுப்பூசிகள் நேற்று திங்கட் கிழமை காலை கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. (நி-5)

# அரசின் முயற்சிகள் தோற்கடிக்கப்படும்

## தேரர் சூளுரை

(கொழும்பு)

நாட்டில் தேசிய வளங்களைப் பாதுகாக்கும் தலைவர்கள்இருக்கவேண்டும், ஆனால் இன்று அத்தகைய தலைவர்கள் இல்லை என்பது துயரமானது என எல்லே குணவன்ச தேரர் தெரிவித்துள்ளார். திருமதி பண்டாரநாயக்கவிற்கு பின்னர் ஆட்சிக்கு வந்த அனைத்து தலைவர்களும் நாட்டின் வளத்தின் ஒரு பகுதியை இந்தியா, அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு விற்றனர்.

எம்.சி.சி ஒப்பந்தத்தை கிழித்தெறிவதாக உறுதியளித்த தற்போதைய அரசாங்கம் இப்போது உடன்படிக்கையை பகுதிகளாகச் செயல்படுத்துவதாகவும், யுகதானவி மின் நிலையம் அதே ஒப்பந்தத்தின் ஒரு பகுதி என்றும் எல்லே குணவன்ச தேரர் சுட்டிக்காட்டினார்.

ஒப்பந்தம் ஒரு பெயரில் அல்லது மற்றொரு பெயரில் செயற்படுத்தப்படும் என்றும் அவர் கூறுகிறார். இது தொடர்பாக சட்டத்துறையுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருவதாகவும், அரசின் முயற்சிகள் எப்படியாவது தோற்கடிக்கப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# கெரவலப்பிட்டிய மின் நிலையம் 1000 மில். டொலர் இழப்பைச் சந்திக்கும்

(கொழும்பு)

கெரவலப்பிட்டிய மின் நிலையத்தை அமெரிக்க நிறுவனத்திற்கு வழங்குவதன்மூலம் இலங்கைக்கு 1000 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் இழப்பு ஏற்படும் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

நேற்று திங்கட் கிழமை காலை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க இதனைத் தெரிவித்தார்.

மேலும் அமெரிக்க நிறுவனத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் எட்டப்பட்ட ஒப்பந்தத்தின் உள்ளடக்கங்களை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

## தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பித்து!

புதிதாக கல்யாணம் ஆன ஒருத்தன் அலுவலகம் முடிந்து வீட்டுக்கு வந்தான். ஜான் ஜான் என்று கூப்பிட்டான். உடனே அவனுடைய மனைவி ஓடிவந்து கதவைத் திறந்தாள். எப்படி இருக்கின்றாய் ஜான்? என்று கேட்டுக் கொண்டே உள்ளே போனான்.

இந்த இடத்தில் நமக்கு ஒரு சந்தேகம் வரலாம். இவன் ஜான் ஜான் என்று கூப்பிடுகின்றான். அவன் மனைவி வந்து கதவைத் திறக்கிறாளே என்றான். ஜான் என்பது யாரு. அது ஆணின் பெயர் மாதிரி இருக்கே? என்கின்ற சந்தேகம் உண்மைதான்.

அவன் மனைவி பெயரைச் சுருக்கி செல்லமாக அப்படிக் கூப்பிடுகின்றான். அது வந்து வேறு ஒன்றுமில்லை. மனைவி பெயர் ஜானகி. அதைச் சுருக்கி ஜான் என்று கூப்பிடுகின்றான். 'கி' யை விட்டுவிட்டான்.

இதை வாரியார் சுவாமிகள் ஒரு சொற்பொழிவிலே சொன்னார். அவர் சொன்னார்... இவன் ஜானகியிலேயிருந்த 'கி'யை மட்டுமா விட்டான். வீட்டுக் கீயையே இப்பொழுது அவளிடம் தான் விட்டு வைத்திருக்கின்றான் என்றார். அதாவது வீட்டுச் சாவியே இப்பொழுது அவளிடம் தானாம்.

வந்தவன் அவள் முகத்தைக் கவனித்திருக்கின்றான். அவள் கண் கலங்கியிருந்தது. தேம்பித் தேம்பி அழுகின்றது போல இருந்தது. உடனே இவன் பதறிப் போனான்.

ஏன் என்ன ஆகிவிட்டது. ஏன் இப்படி அழுகின்றாய்? என்றான்.

அதற்கு அவன் மனைவி சொன்னாள்... உங்கள் அம்மா என்னை உற்று உற்றுப் பார்க்கின்றார் என்றாள். உடனே இந்த மகன் கொல்லைப் பக்கம் ஓடினான். அம்மாவைப் பார்த்தான்.

ஏம்மா ஜானை உற்று உற்றுப் பார்க்கின்றாய்? என்று கேட்டான். நான் ஒன்றும் தவறாகப் பார்க்கவில்லையேப்பா. உன்னுடைய மனைவி அல்லவா அதனாலே ஆசையாகப் பார்த்திருப்பேன் என்றார் அவர். இவன் மனைவி முகத்தைப் பார்த்தான். மறுபடியும் அம்மா பக்கம் திரும்பினான்.

இருந்தாலும் ஏன் அவளைப் பார்த்தாய் என்று கேட்டான்.

பெற்ற தாயையே அடிக்க ஆரம்பித்து விட்டான்.

இதற்குள்ளே அந்த மருமகள் ஓடி வந்து ஐயோ அத்தையை அடிக்காதீர்கள் என்று சொல்லிக் கொண்டே அத்தையுடைய இரண்டு கையையும் சேர்த்துக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

இப்பொழுது அவனுக்கு இன்னமும் வசதியாகப் போய்விட்டது. மகனிடம் அடிவாங்கிய அந்த அம்மா மாலை கோயிலுக்குப் போனார். கடவுளிடம் வேண்டிக் கொண்டார். கடவுளே... அவன் என் பிள்ளை. அவனுடைய மனைவியும் எனக்கு இன்னொரு பிள்ளை மாதிரித்தான். அவர்கள் ஏதோ தெரியாமல் நடந்து கொள்கிறார்கள்.

அதை நீ பெரிதாக எடுத்துக் கொண்டு அவர்களுக்கு ஏதும் குறை வைத்துவிடக் கூடாது என்று அந்த அம்மா ஆண்டவனிடம் மனம் உருகி வேண்டிக் கொண்டாராம். இதைத்தான் பெற்றமனம் பித்து என்று சொல்கிறது என்கின்றார் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்.

இங்கே பித்து என்று சொல்வது பைத்தியம் என்கின்ற அர்த்தத்திலே இல்லை. பித்து என்பது மெய்யன்பு.

தனக்கு செய்கின்ற துன்பத்தை மறந்து பிள்ளைகள் மேல் ஒரு தாய் வைக்கின்ற மெய்யன்பு இருக்கு பாருங்க அதுதான் பித்து என்கின்றார் அவர். பித்துப் பிடித்து அலைவது என்பது வேறு. பைத்தியம் பிடித்து அலைவது என்பது வேறு.

ஒரு பைத்தியக்கார வைத்தியசாலையிலேயிருந்து அவசரமாக ஒருத்தர் வெளியில் ஓடிவந்தார். சட்டையெல்லாம் கிழிந்து தொங்கிக் கொண்டிருக்கு. வெளியிலே எதிரிலே வந்த ஒருத்தர் அவரை மடக்கிப் பிடித்தார். எங்கே ஓடுகின்றீர்கள். வாங்க உள்ளே டாக்டரைப் பார்க்கலாம் என்றார்.

அவர் மெதுவாகச் சொன்னார்... நான் தான் டாக்டர். புதிதாக வந்த ஒருத்தன் என்னை இப்படி செய்து விட்டான். பின்னால் அவன் என்னைத் துரத்திக் கொண்டு வருகின்றான். நீங்கள் முதலிலே போய் அவனைப் பிடியுங்கள். நான் பின்னாலே வருகின்றேன் என்றார்.



# சிறுவர் அரங்கம்

## ஐயோ உயிர் போகுதே!



எனவே, நீங்கள் எனக்கு கூறுகிற நன்றியெல்லாம் நரியாரைத் தான் போய்ச்சேரும்," என்றது கரடி.

கனிவோடு நரியை பார்த்தது சிங்கம்.

"நரியே! அந்தக் கரடி கூறியது போன்று, நான் உனக்கு தான் நன்றி சொல்ல வேண்டும்.

இந்த உதவியை நான் என்றும் மறக்க மாட்டேன்," என்று உணர்ச்சிப் பெருக்கோடு கூறியது சிங்கம்.

"சிங்கராஜாவே! உங்களுக்கு உதவி செய்வது என் கடமை. நான் என் கடமையைத் தான் செய்தேன்," என்றது நரி.

அதன் பின், நரியும், சிங்கமும் விடை பெற்றன.

சில நாட்களுக்கு பின் இரைக்காக காட்டில் எங்கெல்லாமோ அலைந்து திரிந்தது சிங்கம்.

நீண்ட நேரமாக அலைந்தும், இரை ஒன்றும் கிடைக்கவில்லை. பசியால் சிங்கத்திற்கு, மயக்கம் வந்துவிட்டது.

அப்போது, பாறையின் மீது ஏதோ ஒரு விலங்கு படுத்திருப்பதை கவனித்தது.

"அடடே! நமக்கு இன்று அதிர்ஷ்டம் தான். ஓடோடி சென்று இரையைப் பிடிக்க வேண்டாம். பாறை மீது படுத்திருக்கும் விலங்கை அப்படியே அமுக்கிப் பிடித்து இரையாக்கி விடலாம்" என்ற முடிவோடு, மெல்ல மெல்லப் பாறையை நோக்கிப் பதுங்கிச் சென்றது சிங்கம்.

உடனே, அப்படியே நிலை தடுமாறியபடி நின்றது.

பாறையின் மீது நரி படுத்திருந்தது. களைப்பின் காரணமாக அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தது.

சிங்கமோ பசியால் மிகவும் துடித்தது.

(தொடரும்)

# மகாபாரதம்




சூரியன் உதயமான பின்னரும் அவர்கள் கண் விழிப்பதில்லை. இரவு, பகல் எப்போதும் ஒவ்வொரு வீட்டிலும் கலவரமே காணப்பட்டது.

தூய்மை என்பது எங்கும் இல்லை. இந்நிலையில் அந்த அசுரர்களை விட்டு நான் விலகி உன்னிடம் வந்து சேர்ந்தேன்".

லட்சுமியின் இப்பேச்சைக் கொண்டு அந்த மாமகளின் கருணை வேண்டுவார் எப்படி நடந்து கொள்ள வேண்டும், எப்படி நடந்து கொள்ளக் கூடாது என்பதை உணரலாம் என்றார் பீஷ்மர்.

**அடக்கத்தின் மேன்மை**

அடக்கத்தின் மேன்மையைப் பற்றி பீஷ்மர் உரைக்கிறார்.

ஆகமப் பயிற்சி மிக்க சான்றோர்கள் எல்லோரும் அடக்கம் ஒன்றே மனிதனை நல்ல நிலைக்கு உயர்த்தும் எனக் கூறுகின்றனர்.

அடக்கமுள்ளவன் தான் செயலின் பயனை அடைய முடியும். அடக்கம் உடையவனிடத்தில் தான் எல்லா நற்பண்புகளும் நிலையாகத் தங்கியிருக்கின்றன.

மன அடக்கமின்றி எப்போதும் அலைபாயும் நெஞ்சத்தவரால் எந்தச் செயலையும் செய்ய முடியாது. எந்த ஒரு நற்பண்பையும் தொடர்ந்து காப்பாற்ற முடியாது.

நல்லொழுக்கம் என்பதே அடக்கத்தின் மீது எழுப்பப்படும் மாளிகை தான். அடக்கம் உடையவனை யாவரும் போற்றுவர்.

அடக்கத்தின் மற்றொரு பெயர் தூய்மை. அடக்கம் உள்ளவன் பழி, பாவங்களுக்கு அஞ்சி நடப்பான். மன அடக்கம் உடையவனால் எதையும் ஆழ்ந்து சிந்திக்க முடியும்.

சிந்தனைக்குப் பிறகு அவன் செய்யும் செயல்களில் பழுது இராது. பயன் இருக்கும். எதையும் நினைத்துப் பார்த்துப் பார்த்துச் செய்வதால் செய்யும் செயலில் முழுமை இருக்கும்.

வினை முடித்த செம்மல் உள்ளமொடு இரவில் அவனால் நிம்மதியாக உறங்க முடியும். அவன் உற்சாகத்துடன் கண் விழிப்பான். (தொடரும்)

நீங்கள் நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை. தீமை செய்வதை நிறுத்துங்கள்.

– டால்ஸ்டாய்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பொதுமக்களைப் பாடாய்ப்படுத்தும் அரச அமைப்புகளைக் காண்மினே!

ஜனநாயகம் என்ற பேரால் தெரிவு செய்யப்படும் ஆட்சித் தரப்புகள் ஐந்தாண்டுகளைக் காலம் கடத்துவது எழுதப்பட்ட விதியாயிற்று.

இதில் ஆறை நூறாக்க வல்லவரும் ஐந்து ஆண்டுகள் ஆட்சியில் இருப்பர்.

நூறை நீறாக்குபவரும் ஐந்து ஆண்டுகள் ஆட்சிக் கதிரையில் இருந்து காலம் போக்குவர்.

இது ஜனநாயகதின் பலயீனம் என்றே கூறவேண்டும்.

இந்தப் பலயீனத்தைப் போக்குவதற்கு ஆட்சியில் இருப்பவர்கள் தொடர்பில் மதிப்பீடு செய்கின்ற முறைமையை தேர்தல் திணைக்களம் கண்டறிய வேண்டும்.

அதாவது ஓர் அரசாங்கம் ஆட்சியைப் பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகள் கடந்த பின்னர் அந்த அரசாங்கத்தின் பலம், பலயீனம் தொடர்பில் மக்களின் கருத்தை அறிகின்ற ஏற்பாடுகள் அவசியமாகின்றன.

இல்லையேல் நாடு வளர்ந்தாலும் சரி. வீழ்ந்தாலும் சரி. ஐந்து ஆண்டுகள் பல்லைக் கடித்துக் கொண்டிருக்க வேண்டியது தவிர்க்க முடியாத தலைவிதியாகிவிடும்.

இவ்வாறான சூழமைவில் ஏற்படக்கூடிய எதிர்மறைச் சிந்தனைகள் மற்றும் எதிர்மறைக் கலாசாரங்களை மீள்நிலைக்குக் கொண்டு வருவதென்பது முடியாத காரியம்.

சுருங்கக்கூறின், சமகாலத்து கொரோனாத் தொற்றுக் காரணமாகவும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சி நிலை காரணமாகவும் அரச நிர்வாகம் என்பது மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

அதிலும் குறிப்பாக வடபகுதியிலுள்ள அரச திணைக்களங்கள், அரச வைத்திய சாலைகள், அரச கால்நடை வைத்தியசாலைகள் என அனைத்து அரச நிர்வாகங்களும் சேவையை வழங்காத கடன் கழிப்பு நிறுவனங்களாக இருப்பதைக் காண முடியும்.

இதில் சில புறநடைகள் இருக்கின்றன என்பதை நாம் மறுதலிக்கவில்லையாயினும் பெரும்பாலான அரச நிறுவனங்கள் கொரோனாப் பெருந்தொற்றைச் சாட்டாக வைத்து பொதுமக்களைப் பாடாய்ப்படுத்துகின்றன என்பது நிறுதிட்டமான உண்மை.

இதனால் பொதுமக்கள் தமது நாளாந்த சீவனோபாயம் உட்பட தொழில் முயற்சிகள் ஈறாகப் பெரும் பாதிப்புகளையும் இழப்புகளையும் சந்தித்து வருகின்றனர்.

அதிலும் சில அரச திணைக்களங்களில் இருக்கக்கூடிய ஊழியர்கள் சிலர், அங்கு வரக்கூடிய பொதுமக்களைத் துரத்துகின்ற கடமையைச் செய்வதற்காக நியமிக்கப்பட்டவர்கள்போல் நடந்து கொள்வதுதான் கொடுமையிலும் கொடுமை.

அதட்டலும் வெருட்டலும் உரிய பதிலின்மையும் காரணமாக பொதுமக்கள் அதிலும் குறிப்பாக ஏழை மக்கள் எதுவும் செய்ய முடியாமல் தங்களின் அவலநிலையை நொந்து கொள்கின்றனர்.

என்ன செய்வது, பொதுமக்களின் பணிக்காக நியமிக்கப்பட்டவர்களுக்கு ஊதியம் மட்டுமே கண்ணுக்குத் தெரியும்போது, யாரை யார் குறை சொல்ல முடியும்.

ஆனாலும் ஒன்றுமட்டும் உண்மை. அதாவது, எடுக்கின்ற வேதனத்துக்காக ஆகக் குறைந்தளவேனும் பொதுமக்களுடன் அன்பாகப் பேசி அவர்களின் தேவைகளைக் கேட்டறிந்து அவற்றை நிவர்த்திக்காவிடில் அது நிச்சயம் கன்மவினையாய் திரண்டு சம்பந்தப்பட்டவர்களைச் சூழும் என்பது சர்வநிச்சயம்.

# கன்று ஈனும் நிலையில் இருந்த பசு மாட்டினை வெட்டி குளத்தில் வீசிய விசமிகள்

## வவு. தவசிகுளத்தில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா தவசிகுளம் பகுதியில் கன்று ஈனும் நிலையில் இருந்த பசு மாடு ஒன்றினை கத்தியால் வெட்டிய விசமிகள் அதனை அருகில் உள்ள குளத்தில் எறிந்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரிய வருகையில்,

வவுனியா தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரின் நல்லின வளர்ப்பு மாடு கடந்த இரு தினங்களாக காணாமல்போயுள்ளது.

இதனையடுத்து அவர் தேடுதல் மேற்கொண்டபோது அவரது வீட்டிற்கு அருகில் அமைந்துள்ள குளத்தில் உயிரிழந்த நிலையில் காணப்பட்டது.

குறித்த பசு மாட்டின் தலை மற்றும் உடற்பகுதிகள் கூரிய ஆயுதத்தால் அறுக்கப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,299)

## யாழில் 21 பேர் உட்பட வடக்கில் 26 பேருக்கு தொற்று

ஒன்றரை வயதுப் பெண் குழந்தையுடன் யாழ். மாவட்டத்தில் 21 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 26 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 162 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 26 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பதாக மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில்,

யாழ்போதனா வைத்தியசாலையில் 16 பேர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 3 பேர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 2 பேர் (ஒன்றரை வயதுப் பெண் குழந்தை உட்பட).

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர்,

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒருவர்,

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒருவர்,

காங்கேசன்துறை கடற்படை முகாமில் 2 பேர் என தொற்றாளர்கள் அடையாளம்காணப்பட்டுள்ளனர். (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும்பராமரிப்பு வேலைகளுக்காக இன்று 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** கணேஸ்வரம்- தெல்லிப்பழை ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** பம்பைமடு, பெரியகாடு, நெளுங்குளம் நீர்வழங்கல் சபை, அறுகம்புல்வெளி, பாரதிபுரம், கூமாங்குளம், கூமாங்குளம்கிருஷ்ண மெடி கிளினிக், கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், நாகரிலுப்பைக்குளம், நெளுக்குளம்கலைமகள் பாடசாலையடி, நொச்சிக்குளம், அவுதப்பிட்டிய, பாண்சினன்குளம், பொன்னாவரசங்குளம், இராஜேந்திரகுளம், சாம்பல்தோட்டம் வீட்டுத் திட்டம், விநாயகபுரம் வீட்டுத்திட்டம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## முல்லை. நாயாறு பகுதியில் மோ.சைக்கிள் விபத்து; இளைஞன் படுகாயம்

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட நாயாறு பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்தில் சிக்கியதில் இளைஞர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

செம்மலை கிழக்கு, நாயாறு பகுதியைச் சேர்ந்த ஏ.கதீஸ்கரன் (வயது - 23) என்ற இளைஞரே விபத்தில் சிக்கி படுகாயம் அடைந்துள்ளார்.

செம்மலையிலிருந்து நாயாறு நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் இருந்த வடலியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞரின் கழுத்துப் பகுதியில் கருக்கு வெட்டியதில் அவர் படுகாயம் அடைந்துள்ளார்.

அவர் உடனடியாக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ம-3,281)

## மருத்துவக் குறிப்பு

**மாம்பூவை நிழலில் உலர்த்தி கசாயம் வைத்து காலை, மாலை, சாப்பிட்டு வர நாட்பட்ட சீதபேதியும் குணமாகும்.**

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## வெற்றிக்காகப் போராடு

❖ வலிமை மிக்க சுறுசுறுப்பான நூறு இளைஞர்கள் இருந்தால் போதும். இந்த உலகம் புரட்சிகரமான மாறுதலைப் பெற்று விடும்.

❖ அறியாமையுடன் கூடிய உயிரற்ற வாழ்க்கையை விட மரணமே மேலானது. தோல்வியைத் தழுவி உயிர் வாழ்வதைக் காட்டிலும் போர்க்களத்தில் மடிவது சிறந்தது.

❖ யாரும் திரும்பிப் பார்க்கத் தேவையில்லை. முன்னோக்கி விரைந்து செல்லுங்கள். ஆற்றல், அஞ்சாமை, பொறுமை,மனஉறுதி ஆகியவையே தேவை. இவை இருந்தால் மகத்தான காரியங்களை நம்மால் சாதிக்க முடியும்.

❖ பகை, கோபம் ஆகியவற்றை யார் மீதும் திணிக்காதீர்கள். அது வட்டியும், முதலுமாக உங்களிடமே திரும்பி வந்து சேர்ந்து விடும். இதை எந்தச் சக்தியாலும் நிறுத்த முடியாது.

❖ சுயநலம் இல்லாத மனிதன் மரணத்திற்கும் அஞ்ச வேண்டியதில்லை. உண்மை, நேர்மை, மனத்தூய்மை கொண்டவனின் முன்னேற்றத்தை யாராலும் தடுக்க முடியாது.

# பல யுத்த களங்களையும் ஆக்கிரமிப்புக்களையும் கண்ட ஆப்கானிஸ்தான்

04

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



### ஆப்கானிஸ்தான் சாம்ராச்சியங்களின் சமாதி

ஆப்கானிஸ்தான். பொருளாதார ரீதியிலோ இராணுவ ரீதியிலோ முக்கியத்துவம் மிகுந்தது அல்ல. ஆனால் புவியியல் ரீதியான இருப்பிடம் இந்நாட்டை அரசியல் முக்கியத்துவம் மிகுந்ததாக மாற்றி விட்டது. ஐரோப்பா, ரஷ்யா, சீனா, இந்தியா எண்ணெய் வளம் மிகு நந்த வளைகுடா நாடுகள் ஆகியவற்றிற்கு மத்தியில் அமைந்துள்ளதால் இந்நாடு முக்கியத்துவம் மிகுந்ததாக திகழ்கிறது. இந்நாட்டை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர உகை வல்லரசுகள் முயன்றன. ஆனால் பல ஆயிரம் உயிர்களை பலிகொடுத்து புறமுதுகிட நேர்ந்ததுதான் இறுதியில் நடந்தது. இதனாலேயே ஆப்கா னிஸ்தான் சாம்ராச்சியங்களின் சமாதி **(GRAVEYARD OF EMPIRES)** என அழைக்கப்படுகிறது.

**ஆப்கானிஸ்தான். பொருளாதார ரீதியிலோ இராணுவ ரீதியிலோ முக்கியத்துவம் மிகுந்தது அல்ல. ஆனால் புவியியல் ரீதியான இருப்பிடம் இந்நாட்டை அரசியல் முக்கியத்துவம் மிகுந்ததாக மாற்றிவிட்டது. இந்நாட்டை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர உலக வல்லரசுகள் முயன்றன. ஆனால் இன்று வரை பல ஆயிரம் உயிர்களை பலிகொடுத்து புறமுதுகிட நேர்ந்ததுதான் இறுதியில் நடந்தது. இதனாலேயே ஆப்கானிஸ்தான் சாம்ராச்சியங்களின் சமாதி (GRAVEYARD OF EMPIRES)என அழைக்கப் படுகிறது.**

சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராச்சியம் ஆப்கானிஸ்தான் மீது 3 முறை போர் தொடுத்தும் தோல்வியே மிஞ்சியது. பல ஆயிரம் இராணுவ வீரர்களையும் பிரிட்டன் பலிகொடுக்க நேர்ந்தது. இதையடுத்து சோவியத் யூனியனும் ஆப்கானிஸ்தானை வசப்படுத்த மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்தது. 14 ஆயிரம் பேரை பறிகொடுத்து படைகளை திரும்பப் பெற்றது சோவியத் யூனியன். அமெரிக்கா வும் மேற்கத்தேய நாடுகளின் படைகள் கொண்ட நேட்டோவும் கூட ஆப்கானிஸ்தானில் தங்கள் 4 ஆயிரம் வீரர்களை பறிகொடுத்துள்ளன.

கடந்த 20 ஆண்டுகளில் ஆப்கானிஸ்தானில் இராணுவ ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பேரிழப்புகளை சந்தித்த அமெரிக்காவும் தற்போது படைகளை விலக்கிக் கொண்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் நிலவும் பழைமைவாத ஆதிக்க சூழலும் வித்தியாசமான புவியியல் அமைப்பும் வல்லரசு படைகளின் தோல்விக்கு முக்கிய காரணமாக கூறப்படுகிறது. தற்போது 20 ஆண்டு இடைவெளிக்கு பிறகு ஆப்கானிஸ்தான் மண் மீண்டும் பழமைவாத தலிபான்களின் ஆதிக்கத்தில் வந்துள்ளது.

### முதலாம் ஆங்கிலேய ஆப்கானியப்போர் (First Anglo-Afghan War)

இப்போரை ஆப்கானிஸ்தானின் பெருந்துயரம் எனக் கூறுவதுமுண்டு. **(Disaster in Afghanistan)** இப்போர், பிரித்தானிய கிழக்கிந்தியக்கம் பெனிப்படைகளுக்கும், ஆப்கானித்தான் அமீரகத்தின் பழங்குடி இனப் படைகளுக்கும் 1839 முதல் 1842 வரை நடைபெற்றது. இப்போரில் 4,500 பிரித்தானிய மற்றும் இந் திய வீரர்களும், 12,000 போர் துணையாட் களும், ஆப்கானியப் பழங்குடி வீரர்களால் கொல்லப் பட்டனர்.

**ஆப்கானிஸ்தான் அமீரகத்தின் வாரிசுரிமைப் போட்டியில் மோதிக் கொண்ட அமீர் தோஸ்துமுகமது அலிகானுக்கும், முன்னாள் அமீர் ஷாசூஜாதுராணிக்கும் இடையே தலையிட்ட பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பனிப்படைகள் ஓகஸ்ட், 1839 இல் காபூலைக் கைப்பற்றினார். இருப்பினும் 1842 ஆம் ஆண்டின் கடுமையான குளிர்காலத்தில், ஆப்கானியப் பழங்குடிப் படைகளால், பிரித்தானியப் படைகள் ஆப்கான் மண்ணிலிருந்து அடித்து விரட் டப்பட்டனர்.**

ஆப்கானிஸ்தான் அமீரகத்தின் வாரிசுரிமைப் போட்டியில் மோதிக் கொண்ட அமீர்தோஸ்து முகமது அலிகானுக்கும், முன்னாள் அமீர்ஷா சூஜாதுராணிக்கும் இடையே தலையிட்ட பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பனிப்படைகள் ஓகஸ்ட், 1839 இல் காபூலைக் கைப்பற்றினார்.

இருப்பினும் 1842- ஆம் ஆண்டின் கடுமையான குளிர்காலத்தில், ஆப்கானியப் பழங்குடிப்படைகளால், பிரித்தானியப் படைகள் ஆப்கான் மண்ணிலிருந்து அடித்து விரட்டப்பட்டனர். 19 ஆம் நூற்றாண்டில் மத்திய ஆசியாவின் பகுதிகள் குறித்து, பிரித்தானியப் பேரரசுக்கும், ரஷ்யப் பேரரசுக்கும் இடையே நடைபெற்ற இராஜதந்திரப் போட்டியின் விளைவால் நடந்த பெரும் விளையாட்டின் தாக்கமே, முதலாம் ஆங்கிலேய ஆப்கானியப் போருக்கு அடிப்படைக் காரணம் ஆகும்.

ரஷ்யச் சக்கரவர்த்தி முதலாம் பவுல், 1800 இல் பிரித்தானிய இந்தியா மீது போர் தொடுக்க ஆணையிட்டார். 1801 இல் ரஷ்யப் பேரரசர் பவுல் கொல்லப்படவே, இந்தியா மீதான போரை ரஷ்யா கைவிட்டது. ஆனால் 19 ஆம் நூற்றாண்டில் ரஷ்யர்கள், பிரித்தானிய இந்திய அரசை கடும் எதிரியாகப் பார்த்தனர். மேலும் ரஷ்யர்கள் மத்திய ஆசியாவின் பகுதிகளை கைப்பற்றத் தொடங்கியதால், இந்தியா மீதும் ரஷ்யா படையெடுக்கும் எனப் பிரித்தானியப் பேரரசு சந்தேகப்பட்டது. 1837 இல் ஆப்கானிஸ்தான் அமீர் பதவிக்கு ஏற்பட்ட வாரிசு உரிமைப் போட்டியால், ஆப்கானின் அரசியலில் நிலையற்ற தன்மை ஏற்பட்டது. மேலும் சிந்து, பஞ்சாப் மற்றும் வட மேற்கு எல்லைப் புற மாகாணங்கள் சீக்கியப் பேரரசின் கீழ் இருந்ததாலும், ரஷ்யப்படைகள் ஆப்கானிஸ்தான் வழியாகப் பிரித்தானிய இந்தியாவைத் தாக்கும் எனக் கணித்தனர்.

ஆனால் ரஷ்யப் பேரரசின் படைகள் மெதுவாக மத்திய ஆசியாவின் பகுதிகளில் தங்களது ஆதிக்கத்தை நிலை நாட்டினர். ரஷ்யாவின் இச்செயல், பிரித்தானிய இந்தியாவை பாதிக்கும் எனப் பிரித்தானிய அரசியல் இராஜதந்திர வல்லுநர்கள் கணித்தனர். எனவே பிரித்தானியக் கிழக்கிந்தியக்கம் பெனியினர், ஆப்கானிஸ்தான் அமீர் தோஸ்து முகமது கானுடன், ரஷ்யாவிற்கு எதிராக கூட்டணி அமைக்க, ஒரு தூதுக் குழுவை காபூலுக்கு அனுப்பினர்.

சீக்கியப் பேரரசிடம் தாம் இழந்த பெஷாவர் நகரத்தை மீட்டுத் தருமாறு, ஆப்கான் அமீர் பிரித்தானியக் கிழக்கிந்திய நிறுவனத்தின் தூதுக் குழுவினரிடம் கோரினார். இக்கோரிக்கையை கம்பனி தூதுக் குழுவினர் ஏற்கமறுத்தனர். இந்நிலையில் ரஷ்ய நாட்டின் தூதுவர், ஆப்கானிய அமீர் தோஸ்து முகமது கானை காபூலில் சந்தித்து தங்கள் நாட்டின் ஆதரவை தோஸ்து முகமதுகானுக்கு தெரிவித்தார்.

உடனே பிரித்தானிய இந்திய ஆளுநர், ஆப்கானியர்களிடம் உறவு மேம்படுத்திக் கொள்வதற்கு, சீக்கியப் பேரரசர் ரஞ்சித்சிங்கிடம், ஆப்கானிஸ்தானிடமிருந்து கைப்பற்றிய பெஷாவர் நகரத்தை திரும்ப அவர்களிடமே வழங்கக்கூறினார். இக் கோரிக்கையை ராஜாரஞ்சித்சிங் ஏற்க மறுத்துவிட்டார். இந்நிலை யில் 1838இல் ரஷ்யா - ஆப்கான் பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது.

ஏற்கனவே தோஸ்து முகமது கான் என்பவர், ஆப்கான் அமீர்சூஜாஷாவை அமீர் பதவியிலிருந்து நீக்கி தன்னை அமீராக அறிவித்துக் கொண்டார். 1838இல் இந்தியாவில் அடைக்கலமாக தங்கியிருந்த அமீர் சூஜாஷா. ஆப்கானை படையெடுத்துத் தாக்கி தன்னை ஆப்கான் அமீர் பதவியில் நியமிக்க பிரித்தானிய இந்திய அரசை வலியுறுத்தினார்.

1 ஒக்டோபர் 1838 இல் இந்தியத் தலைமை ஆளுநர், ஆப்கான் அமீரகத்தின் மீது தாக்குதல் தொடுத்து, சூஜாஷாவை ஆப்கான் அமீராக நியமிக்க பிரித்தானியக் கிழக்கிந்தியக்கம் பெனிப்படைத் தலைவருக்கு ஆணையிட்டார்.

பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனிப் படைகள் 22 ஜுலை 1839 இல் ஆப்கானிஸ்தானின் காசுனி நகரக் கோட்டையைக் கைப்பற்றினர். 25 நவம்பர் 1838 இல் இராஜா ரஞ்சித் சிங்கின் சீக்கியப் படைகள் துணையுடன், பிரித்தானியக் கிழிந்தியக்கம் பெனிப்படைகள் கைபர் கணவாயைக் கடந்து ஆப்கானின் காபூல் நகரத்தைக் கைப்பற்றினர். ஓகஸ்ட் 1839இல் சூஜார்ஷா மீண்டும் ஆப்கானிய அமீராக நியமிக்கப் பட்டார்.

ஆப்கான் அமீர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட தோஸ்து முகமதுகான் தனது ஆப்கானியப் பழங் குடிப்படைகளைக் கொண்டு, பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் படை கள் மீது கொரில்லா தாக்குதல்கள் தொடர்ந்தார். பிரித்தானியப் படைகளின் கடுமையான தாக்குதலை எதிர் கொள்ள இயலாத தோஸ்து முகமது கான் உஸ்பெகிஸ்தான் நாட்டின் புகாரா நகரத்தில் அடைக்கலம் அடைந்தார்.

**1838ல் பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனிப் படைகள் காபூல் நகரத்தைக் கைப்பற்றினர். ஓகஸ்ட் 1839 இல் சூஜார்ஷா மீண்டும் ஆப்கானிய அமீராக நியமிக்கப்பட்டார். 8,000 பிரித்தானியப் படைகளின் துணையுடன் அமீர் சூஜார்ஷா ஆப்கானை ஆண்டார்.**

(தொடரும்...)

## 51 பேர்...

றால் நாட்டில் மேலும் 51 பேர் உயிரிழந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்துள்ளவர்களில் 29 ஆண்களும் 22 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

அந்த வகையில், 30 தொடக்கம் 59 வயதுக்கிடைப்பட்டவர்களில் 05 ஆண்களும் 05 பெண்களுமாக 10 பேரும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 24 ஆண்களும் 17 பெண்களுமாக 41 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 12,731 ஆக உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வெள்ளியன்று...

தாகத் தெரிவித்த இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா, தேவையான வழிகாட்டுதல்கள் தற்போது இறுதி செய்யப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்தார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை நீக்கிய பின்னர், சுகாதாரம், பொதுப் போக்குவரத்து, விவசாயம், பொதுச் சேவை மற்றும் தனியார் துறையை எவ்வாறு பராமரிப்பது என்பது தொடர்பான வழிகாட்டுதல்கள் மற்றும் கட்டுப்பாடுகளை அதிகாரிகள் அறிவிப்பார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்த சில நாட்களில் இது தொடர்பான பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், அடுத்த 36 மணி நேரத்தில் புதிய வழிகாட்டுதல்கள் வெளியிடப்படும் என்றும் தெரிவித்தார்.

நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 53% பேருக்கு இப்போது முழுமையாக தடுப்பூசி போடப்பட்டுள்ளதாகவும் 30 வயதுக்கு மேற்பட்ட 98% பேருக்கு முழுமையாக தடுப்பூசி போடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

20 முதல் 30 வயதுக்குட்பட்ட மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 50 சதவீதத்தினர் ஒரு டோஸைப் பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டார். (ம-3)

## 19 வயது...

யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து வாள் ஒன்றும் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சங்கானையைச் சேர்ந்த இளைஞனே நேற்று கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

அவரை மல்லாகம் நீதவான் முன்னிலையில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3,18,33)

## யாழ்.வருகிறார்...

மூலம் 3 இலட்சம் மக்கள் (60,000 குடும்பங்களுக்கு) பாதுகாப்பான குடிநீரை வழங்கும் இரண்டு முக்கிய நீர்த் திட்டங்களை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஒக்ரோபர் 6 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

ஆரம்பிக்கப்படும் திட்டங்கள், SWRO உப்புநீக்கும் ஆலைபிரிவு, இது தாளையடியில் கட்டப்படும் மற்றும் இது நயினாதீவில் முழுமையாக நிறைவு செய்யப்பட்ட நீர் வழங்கல் திட்டம் ஆகும்.

இந்தத்திட்டம் இப்போது 5 ஆயிரம் பயனாளிகளுக்கு பாதுகாப்பான நீரை வழங்கும்.

மேலும் யாழ்.நகர நீர் விநியோகத் திட்டமும் விரைவில் தொடங்கும். இதில் ஒரு இலட்சம் மக்கள் தொகையை உள்ளடக்கிய JKWSSP (Jaffna Kilinochchi Water Supply and Sanitation Project) இன் கீழ் 284 கி.மீக்கு நீளமுள்ள குழாய்களை அமைப்பதில் அடங்கும்.

யாழ்.நகர நீர் விநியோகம் மற்றும் தாளையடி SWRO 2023க்குள் முடிக்கப்பட்டு 3 இலட்சம் பயனாளிகளுக்கு சுத்தமான நீர் வழங்கப்படும். (ம-3)

## நல்லாட்சியில்...

பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நேரில் சென்று ஆராய்ந்தார்.

வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ. சுகிர்தன் மற்றும் வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் ஆகியோருடன் இணைந்து நேற்றைய தினம் திங்கட்கிழமை அப்பகுதிகளுக்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்தார்.

கடந்த அரசாங்கத்தினால் விடுவிக்கப்பட்ட காணிகளை இராணுவத்தினர் மீளக்கையகப்படுத்தும் நோக்குடன், அக் காணிகளில் "இது இராணுவத்தினருக்கு சொந்தமான காணி" என எழுதிய பலகைகளை நாட்டியுள்ளனர்.

அதனால் அப்பகுதி மக்களிடம் குழப்பம் நிலவி வந்தது. அத்துடன் இராணுவத்தினர் பலகை நாட்டிய காணி உரிமையாளர்கள், வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளர் மற்றும் வலி.வடக்கு பிரதேச செயலர் ஆகியோரிடமும் முறையிட்டு இருந்தனர்.

இந்நிலையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் அப்பகுதிகளுக்கு நேரில் சென்று ஆராய்ந்துள்ளார். (ம-3,18,33)

## சர்வதேசத்தின்...

"இலங்கை அதன் தனித்துவங்களைப் பாதுகாத்துக்கொண்டு, இறையாண்மையுடன் வெற்றியை நோக்கிப் பயணிக்க அரசு வழிவகைகளை மேற்கொள்கின்றது.

இலங்கை எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையை வெற்றிகொள்வதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்புகள் கிடைக்கும்.

இலங்கையின் பிரச்சினைகளை உள்ளக நிறுவனங்களின் ஊடாகத் தீர்த்துக் கொள்வதற்கு முயற்சிக்கின்றோம்.

நாட்டு விவகாரங்களை வெளியக நிறுவனங்களுக்குப் பொறுப்புக் கொடுப்பதை அங்கீகரிப்பதில்லை.

ஐ.நா., அதன் சட்ட ஒழுங்குகளுக்கு அமைய அனைத்து நாடுகளையும் சமமாக மதிக்க வேண்டும்" என்றார். (ம-3)

## அரிசி விலை...

நோக்கில் 100,000 மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நாட்டில் அத்தியாவசியப் பொருட்களை பதுக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்றுவரும் நிலையில், அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்டமையால் அரிசியின் விலை சடுதியாக அதிகரிக்கும் ஆபத்து உள்ளது.

இதனால் ஏழை மக்களின் வாழ்க்கை பலத்த நெருக்கடியை எதிர்கொள்ளும் அபாயம் உள்ளதாக அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (ம-3)

### பால்மா, சமையல் எரிவாயு, கோதுமை மா, சீமெந்து

# விலைகளில் மாற்றம் செய்ய அமைச்சரவை தீர்மானிக்கவில்லை

(கொழும்பு)

பால்மா, சமையல் எரிவாயு, கோதுமை மா மற்றும் சீமெந்து ஆகியவற்றின் விலைகளில் திருத்தங்கள் குறித்து அமைச்சரவை எந்த முடிவையும் எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும் கொழும்புத் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அத்தியாவசிய உணவு பொருட்களை விடுவிக்க மத்திய வங்கியில் இருந்து தேவையான நிதியை வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (ம-3)

# படிப்படியாக நாடு மீண்டும் திறக்கப்படும்

## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி



(கொழும்பு)

நாடு ஒழுங்கான முறையில் கட்டம் கட்டமாக மீண்டும் திறக்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

"கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் மற்றும் இறப்புகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது.

அதே நேரத்தில் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளும் கணிசமாகக் குறைந்துள்ளனர்.

தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் தொடர்புடைய இறப்புகள் குறைந்த போதிலும், கொரோனா வைரஸின் ஆபத்து குறையவில்லை

நாட்டை மீண்டும் முழுமையாகத் திறக்க முடியாது. அதே நேரத்தில் படிப்படியாக மீண்டும் திறப்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்" என்றும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார். (ம-3)

## குடும்பப் பெண்...

கோட்டைப் பகுதியைச் சேர்ந்த கலைச்செல்வம் தர்சிகா (வயது-30) என்ற ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பப் பெண் கடந்த 22ஆம் திகதி அதிக மருந்து மாத்திரைகளை உட்கொண்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை அவர் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## நாடு திறக்கப்...

அபாயத்திலிருந்து முழுமையாக விடுபட முடியும் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதன் பின்னர் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் தொடர்பில் ஏற்கெனவே சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

அதனையே தொடர்ந்தும் பேண வேண்டும். எதிர்வரும் ஓரிரு தினங்களில் இது தொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்றார். (ம-3)

## அத்தியாவசிய...

சந்திப்பில் ஒன்றில் கருத்துரைத்தபோது விலைவாசி உயர்வு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்தை சீர்படுத்த அரசாங்கத்திடம் எந்தத் திட்டமும் அல்லது பொறிமுறையும் இல்லை. இதன் விளைவாக மக்கள் பெரிதும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர் என்று தெரிவித்தார்.

நாட்டில் மீண்டும் வரிசைகளில் நின்று பொருட்களைக் கொள்வனவு செய்யும் நிலை உருவாக்கப்படும் என்பது தெளிவாகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் கொள்கைக் கட்டமைப்பின் நம்பிக்கைகள் இப்போது உடைந்துவிட்டன. ஜனாதிபதி, பிரதமர் அல்லது அரசாங்கத்திற்கு நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லும் தொலைநோக்கு இல்லை. முழு நிர்வாக பொறிமுறையும் சரிந்துவிட்டது.

இது ஒழுங்கற்றது மற்றும் எந்தத் திட்டமும் இல்லாமல் செல்கிறது. யாரும் எதற்கும் பொறுப்பேற்க மாட்டார்கள் என்ற நிலை ஏற்பட்டுள்ளது என்றும் ரில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

அரசியலமைப்பு மற்றும் சட்டங்களின் படி அரசாங்கம் நாட்டை ஆளவில்லை, மாறாக அவர்களுடைய ஒரு சில நண்பர்களைத் திருப்திப்படுத்தவே செயற்படுகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

அரிசியின் விலை மற்றும் சந்தையில் அரிசித் தட்டுப்பாட்டைக் கட்டுப்படுத்துவது போன்ற சிறிய பிரச்சினைகளில் கூட அரசாங்கம் தலையிடத் தவறிவிட்டது.

பசளைப் பற்றாக்குறை காரணமாக நெல் அறுவடை குறையும் என்பதால் எதிர்காலத்தில் அரிசி விலை இன்னும் அதிகரிக்கும் என்றும் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா எச்சரித்துள்ளார். (ம-3)

# நாட்டில் மேலும் 983 பேருக்கு தொற்று

(கொழும்பு)

நாட்டில் 112 நாட்களின் பின்னர் நாளொன்றில் ஆயிரத்துக்கும் குறைவான கோவிட் தொற்றாளர்கள் நேற்று பதிவாகியுள்ளனர்.

நேற்றைய தினம் மேலும் 983 கோவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 514,592 ஆக அதிகரித்துள்ளது.

(ம-03)


**மேல்மாடி வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம் ஒட்டுமடச் சந்திக்கு அருகாமையில் 5 அறைகள், 2 குளியல் அறைகளுடன் மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு. (8046)

**077 140 3024**


## ஜெபம் செய்து கொண்டிருந்தபோது

# மயங்கி விழுந்து மரணமான அல்வாய் பெண்ணுக்கு தொற்று

(கரணவாய்)

ஜெபம் செய்து கொண்டிருந்த போது மயங்கிவிழுந்து மரணமடைந்த குடும்பப் பெண்ணிற்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அல்வாய் வடமேற்கு, நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த செபபாக்கியம் கிரேஸ்மணி (வயது- 51) என்பவர் கோவளம் பகுதியில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்தார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அவர் அங்கு ஜெபம் செய்து கொண்டிருந்தபோது மயங்கிச் சரிந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவேளை அவர் உயிரிழந்துள்ளதாக வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டது.

அவருக்கு செய்யப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் நேற்று திங்கட்கிழமை வைத்தியசாலைக்குச் சென்ற பருத்தித்துறைமரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார். (ம-03,18,60)


# மீசாலையில் கோவிட்டால் முதியவர் ஒருவர் மரணம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி மீசாலை வடக்குப் பகுதியில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி வீட்டில் தனிமைப்படுத்தலில் இருந்த 78 வயதான முதியவர் ஒருவர் நேற்று திங்கட்கிழமை காலை உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் சுகாதார முறைப்படி தகனம் செய்வதற்காக சாவகச்சேரிஆதார வைத்தியசாலையின்பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(ம-03,30,60)



கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகத்தில் கடமையாற்றும் திரு. ப. யோகேஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தை

அமரர் **மாப்பாணி பசுபதி**

தோற்றம் : 1946.09.29
மறைவு : 2021.09.13

அவர்கள் கடந்த 13.09.2021 (திங்கட்கிழமை) அன்று இறைபதம் சேர்ந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரமடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்
யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்


**வாடகைக்கு**

நாவலர் வீதியில் (பொருளியல் கல்லூரிக்கு அருகாமையில்) வீடு வாடகைக்கு உண்டு. (8045)

**074 029 7659**

**பணிப்பெண் தேவை**

திருநெல்வேலியில் உள்ள வீடொன்றுக்கு பகுதி நேரமாக வேலை செய்ய பணிப்பெண் தேவை. (8042)

**077 340 1003**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம் இரண்டாம் ஒழுங்கையில் 20 அடிப் பாதையுடன் 10 பரப்புக் காணி சட்டபூர்வமான சகல ஆவணங்களுடன் விற்பனைக்கு உண்டு. இரண்டு (02) பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.

(யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 2 Km தூரம்)

தொடர்புகொள்ளும் நேரம் : காலை 9.00 – மாலை 6.00 மணிவரை

ஒரு பரப்பின் விலை ஆறு இலட்சம். [ தரகர் தேவையில்லை ] (8048)

**076 221 2037, 077 288 0152, 076 734 1023**


# மரண அறிவித்தல்



## சுப்பையா செல்லத்துரை

புங்குடுதீவு 6 ஆம் வட்டாரம் சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் ஒட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா செல்லத்துரை நேற்று (27.09.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும் யோகேஸ்வரியின் (யோகம்) பாசமிகு கணவரும் இராஜேந்திரா (வவுனியா), ரஞ்சன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ரவீந்திரன் (கிளிநொச்சி) மற்றும் வேணி, சிறி, லக்சுமி, காந்தன் (பிரான்ஸ்), நிசா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.09.2021) செவ்வாய்க் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 09, ஒட்டுமடம் சந்தி, யாழ்ப்பாணம்.

076 425 2015
077 614 4423

தகவல்:- குடும்பத்தினர்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 27 05 1999

உதிர்வு 29 08 2021

## அமரர் லாவண்யா ஜெயக்குமார்

உடனிருந்து மகிழ்ந்தவளே உறவுகளை விட்டுச் சென்றதேனோ
கண் நிறைந்து நிற்கின்றாய் கனவாகிப் போகாதோ
அன்புடன் எமை ஆதரித்தாய் உறவுகளை அரவணைத்தாய்
உனைத்தேடித் தவிக்கின்றோம் உன்நினைவு அழியாது!

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

எமது மகளின் மறைவுச் செய்தியை அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் கூறிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் பல்வேறு வழிகளில் உதவிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள்.

நாட்டில் நிலவும் கோவிட் - 19 அசாதாரண சூழ்நிலை காரணமாக இன்று (28.09.2021) வீட்டில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்வில் அனைவரையும் அழைக்க முடியாமைக்காக மனம் வருந்துகின்றோம்.

வாலையம்மன் கோவிலடி,
புலோலி மத்தி, பருத்தித்துறை.

குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.